செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

சிலம்பு-௫௧] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௮ சித்திரை (May.'77) [பரல்-௯

‘செந்தமிழ்ச் செல்வி’

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

“‘செந்தமிழ்ச் செல்வி’”

உறுப்பினர் கட்டணம்

(Subscription Rates)

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 12 00 வெளிநாடு ரூ. 20 00

ஆயுள் கையொப்பம்

உள்நாடு ரூ. 120 00 வெளிநாடு ரூ. 200 00

17.5.77

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருக	திருவள்ளுவர் ஆண்டு உ००அ, சித்திரை மே 1977	பரல் கூ

பதிப்புத் துறையில் பட்டறிவு

'செந்தமிழ்ச் செல்வி' சிலம்பு : 49; பரல் : 7இல் 'பதிப்புத் துறையில் பட்டறிவு' என்ற எட்டாவது கட்டுரையின் முடிவில் கம்பராமாயணப் பதிப்புகள் பற்றி அடுத்த கட்டுரையில் எழுது வதாகக் குறிக்கப்பெற்றுள்ளது. அதுபற்றி எழுதத் தொடங்கு மூன் மாகவி சுப்பிரமணிய பாரதியார் உள்ளத்தைக் கவர்ந்த புலவர் மூவர் அருளிச் செய்த நூல்கள் மூன்றைப்பற்றி இங்கே எழுதுவது பொருத்தமாகும் என்று கருதுகின்றேன். தமிழ் என்னும் தலைப்பில்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மைவெறும் புகழ்ச்சியில்லை"

என்று பாரதியார் அறுதியிட்டுரைக்கின்ருர். ஆகவே கம்ப ராமாயணம், திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் அவர் கொண்டிருந்த ஈடுபாடு நன்கு புலனுகின்றது.

பாரதியார் பிறக்கு முன்னரே தமிழ்நாட்டில் தோன்றித் தமிழில் எம். ஏ. பட்டம் பெற்றுப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக அமர்ந்து அரும்பணியாற்றிப் பாரதி யார் பெரும்பிரிவுற்ற அதே ஆண்டில் ஒரு திங்களுக்கு முன் பெரும் புகழோடு உயிர்நீத்த திருவாளர் திருமணம் செல்வக் கேசவராய முதலியார் அவர்கள் எழுதிப் பதித்த நூல்களுள் கம்பர், திருவள்ளுவர், கண்ணகி என்னும் மூன்று நூல்களும்

குறிப்பிடத்தக்கன. அக் காலத்தில் கம்பராமாயணம் முதலியவை தமிழ்ப்புலவர் உலகில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தன என்பது அறியக்கிடக்கின்றது. ஆகவே இம் முப்பெருநூல்கள் பற்றியும் தெரிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

வடமொழியில் உள்ள வான்மீகி இராமாயணத்தை முதனூலாகக் கொண்டு வழி நூலாகத் தமிழில் தோன்றிய கம்பராமாயணம் தமிழில் உள்ள பெருங் காப்பியங்களுள் மிகவும் விரிவாகவும் பெரிதாகவும் அமைந்துள்ளது; விருத்தப்பா வடிவிலே பல்வேறு சந்தங்களைக்கொண்டு சிறப்புற விளங்குகின்றது. வடமொழி மூலத்தைத் தழுவினும் கம்பர் தமிழர் பண்பாட்டிற்கு ஏற்பவும், தமக்கு முன்னிருந்த திருவள்ளுவர் முதலான அருந்தமிழ்ப் புலவோர் நூல்களினின்றும் சொற்றொடர்களையும் கருத்துகளையும் பொருந்தும் வகையில் எடுத்தாண்டும், தமக்குப் பின்னுள்ள புலவர் பெருமக்கள் யாவருடைய உள்ளத்தையும் கவரத்தக்க முறையிலும் சிறப்புறப் புனைந்துள்ளார். கம்பராமாயணத்தில் ஐநூறுக்கு மேற்பட்ட திருக்குறட் பாக்களின் சொற்றொடர்களும் கருத்துகளும் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மேற்காணும் குறிப்புகளால் அததில் ஓர் அகப்பை அள்ளிக் கொண்டதாகக் கூறப்படும் கூற்று வலியுறுதல் காண்க.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் இயற்றியருளிய உலகப் பொதுமறையாகிய திருக்குறள் ஒப்பற்ற மூழுமுதல் தமிழ் நூலாகும்;

> "எல்லாப் பொருளும் இதன்பால் உளவிதனுள்
> இல்லாத எப்பொருளும் இல்லையால்"

என்று புலவர் பெருமக்கள் போற்றிப் புகழும் ஏற்றம் மிக்கது; உலக மொழிகள் பலவற்றுள்ளும் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது; பற்பல உரைகளும் ஆராய்ச்சிகளும் வெளிவந்து கொண்டிருக்கும் சிறப்புடையது தமிழ்நாட்டின் முப்பெரும் பல்கலைக் கழகங்களிலும் திருக்குறளுக்கெனத் தனி ஆராய்ச்சித்துறை நிறுவப்பெற்று நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. திருவள்ளுவருக்குப் பின்வந்த தமிழ்ப் புலவர்கள் யாவரும் திருக்குறளைப் போற்றிக் கைக்கொண்டு சிறப்புற்றிருக்கின்றனர். கச்சியப்ப முனிவர் இயற்றிய விநாயக புராணம் அரசியற்கைப் படலத்தில் 376 திருக்குறட்பாக்களின் சொற்றொடர்களும் கருத்துகளும் பொதிந்து வைக்கப்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சிலப்பதிகாரம் தமிழர் நாகரிகத்தை விளக்கும் ஒப்பற்ற பெருங் காப்பியமாகும்; இது வரலாற்று அடிப்படையில் அமைந்த பேரிலக்கியம்; முழுமுதற் பெருநூல்; முத்தமிழ்க் கருவூலம். இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள தமிழ்நூல் களுள் கதை தழுவி நடக்கும் கலை பல தழுவிய முதற் பேரிலக் கியமாக விளங்கும் சிறப்புடையது.

கம்பர் காலத்திற்குப் பின்னர், இராமன் கதை தமிழ் நாட்டில் மிகுதியாகப் பரவத்தொடங்கியது; இராமாயணக் கதை, நாடகம் முதலியன நடத்துவோரும் பெருகினர், இரா மாயணப் பயிற்சி நாளும் மிகுந்தது. இராமாயணத்தினைச் சுவடிகொண்டு இசையோடு படித்துப் பொருள் விளக்கங்கூறு வோர் பெருகலாயினர். ஆகவே கம்பராமாயண ஏட்டுப்படிகள் மிகுதியாகத் தேவைப்பட்டன. படியெழுதுவோர்களுள் மிகுதி யான கல்வியறிவற்றவர்களும் உண்டு. அவர்கள் தம் அறியா மையால் செய்த பிழைகள் அளவில. கற்றவர்கள் படியெழுதுங் கால் தத்தம் புலமையைக் காட்டும்பொருட்டு இடையிடையே சொற்களைத் திரித்துவிடுவர்; தாம் விரும்பாத பாடல்கள் சில வற்றை விட்டுவிடுவர். தாமே புதியவாக எழுதிய பாடல்கள் சிலவற்றை ஆங்காங்குச் செருகிவிடுதலும் உண்டு. இவ் வாற் றால் கம்பராமாயணத்தில் விடுபட்ட பாடல்களும், இடைச் செரு கல்களும் மிகுந்துள்ளன. வேறு எந்த நூலுக்கும் இல்லாத அளவுக்கு எண்ணற்ற பாட வேறுபாடுகளும் மலிந்துள்ளன. இதனல் எந்த நூலுக்கும் இல்லாத அளவுக்கு ஏடுகளும் பல்கிப் பெருகியுள்ளன.

அச்சிடப்பெற்ற கம்பராமாயணப் பதிப்புகள் இதுகாறும் பலப்பல வெளிவந்துள்ளன. தனித்தனிக் காண்டங்களாகவும், மூலம் மட்டுமே உடையனவாகவும், உரையோடு கூடியனவாக வும், உரைநடை வடிவினவாகவும் பதிப்பிடப்பட்டுள்ளன.

அண்மையில் வெளி வந்துள்ள பதிப்பு கம்பராமாயணப் பாடல்கள் முழுவதையும் ஒரே தொகுதியாகப் புணர்ச்சியின்றிச் சந்திபிரித்து அச்சிடப்பட்டுள்ளது. முன்னர் மர்ரே கம்பெனி யாரும் கமபராமாயணத்தைச் சந்திபிரித்தே வெளியிட்டனர். தமிழில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நன்னெறி, நீதிநெறி விளக்கம், விவேக சிந்தாமணி, நீதிச் சதகங்கள் போன்ற தொடக்கக் கல்விக்குரிய நூல்களுங்கூடப் புணர்ச்சி யின்றி எழுதப்படுவதும் பயிலப்படுவதும் இல்லை. உரையெழு தும்போதே சந்திபிரிக்கப்படும். கம்பராமாயணத்தைப் படித்துப் பொருள் உணர்ந்து கொள்ளும் அளவிற்கு ஆர்வமும் அறிவும்

உடையவர்கள் புணர்ச்சியோடு இருப்பின் விளங்கிக்கொள்ள மாட்டார்கள் என்று கூற முடியாது. சந்தி பிரித்துவிட்ட அளவி லேயே (உரையின்றி) யாவரும் விளங்கிக்கொள்ளுவர் என்றும் கொள்ள முடியாது. ஈரல் கட்டுக்கோப்புக் குலைந்த பற்களைப் போலப் புணர்ச்சியின்றிப் பாடல் இருப்பின் அஃது ஓசை நயம் உடையதாகுமோ? ஓசை நயமற்ற பாடல், பாடவும் படிக்கவும் பயன்படுமோ? என்பதைத் தமிழறிஞர்கள் சிந்தித்தல் வேண்டும்.

செந்தமிழ்ச் செல்வி 45 ஆம் சிலம்பு 12 ஆம் பரலில் "பதிப்புத்துறையில் பட்டறிவு" என்ற தலைப்பிலுள்ள 3 வது கட்டுரையில் 1812 ல் மர எழுத்துக்களைக்கொண்டு ஒன்று சேர்த்து அச்சிடப்பெற்ற திருக்குறள் மூலமும், நாலடியார் மூல மும் பற்றி எழுதப்பட்டுள்ளது. 1815 ல் ஒட்டக் கூத்தர் எழுதிய இராமாயணம் உத்தரகாண்டத்தை உரைநடைப் படுத்திச் சென்னை, கல்விச் சங்கத்தார் மர எழுத்துக்களைக் கொண்டு பதிப்பித்துள்ளனர். அதன்கண் ஒற்றெழுத்து கட்குப் புள்ளி கிடையாது. அது மொத்தம் 132 பக்கங்களைக் கொண்டது. அதன் முகப்பில் ஒற்றில்லாமல் பெரிய எழுத் தில். அச்சிடப் பெற்றிருப்பது வருமாறு.

> "அருமபலகலைகளாயநத அறிசெலவந தரும புகழ சஙகததாரவாதமமால தமிழச சஙகததிற றமிழ கறகப புகுமவாகள சொலலும பொருளும எளிதினுணாதற பொருடடத தமிழச சஙகத தலைமைப புலமைத திருசசிற றமபல தேசிகன கொடுநதமிழ நடையொடுஞ செந தமிழ நடை விரா யேனைய காணடபபொருளுந தொகை யுறச செயத விராமாயணததுததரகாணடக கதை தொணடமணட லததினகண விளஙகிய சென்ன படடணதது கலவிச சஙகததசசெழுததாற பதிபபிககப படடது."

மேலே குறிக்கப்பெற்ற இரண்டு நூல்களும் மறைமலை யடிகள் நூல்நிலையத்திலே போற்றி வைக்கப் பெற்றிருக் கின்றன.

மேலே குறிப்பிட்ட செல்வி இதழில் 1839 ஆம் ஆண்டில் 18 பக்கங்களைக் கொண்ட கௌரி பஞ்சாங்கம் என்ற சிறு நூலைப் பற்றிய செய்தி விளக்கப்பட்டுள்ளது. அதன்கண் அது காறும் அச்சிற் பதிப்பிக்கப்பட்ட 204 தமிழ்ப் புத்தகங்களின் பட்டி விலைக்குறிப்புடன் உள்ளது. அவை யாவும் சென்னை

ஜெனரல் முத்தையா முதலியார் தெருவில் கல்விக் களஞ்சிய அச்சுக்கூடத்திற்குச் சொந்தக்காரர்களாகிய உமாபதி முதலியார், சிற்றம்பல முதலியார், பொன்னம்பல முதலியார் ஆகிய உடன்பிறந்தார் மூவரிடத்திலும் கிடைக்கப்பெறும் என்ற குறிப்பும் உள்ளது.

அப் பட்டியின்கண் இராமாயணக் கீர்த்தனே, உத்தர ராமாயணம் ஆகிய இரண்டு மட்டுமே குறிக்கப்பெற்றுள்ளன. அச்சில் பதிப்பித்து வருபவை என்ற தலைப்பில் கம்பராமாயணம், காமரச மஞ்சரி, திவாகரம் உரை, தொன்னூல், திருவாதவூரர் புராணம் முதலிய சில நூல்களின் பெயர்கள் விலை குறிக்கப்பெருமல் காணப்பெறுகின்றன. எனவே 1839 க்கு முன் கம்பராமாயணம் மூலமாகவோ உரைநடையாகவோ அச்சிடப் பெறவில்லை என்பது திட்டமாகத் தெரிய வருகின்றது.

1843 இல் கம்பராமாயணம் அயோத்தியா காண்டம் மூலம் மட்டும் அச்சிடப் பெற்றுள்ளது. அதன் முகப்பில்,

'அயோத்தியா காண்டம்

சாலி 1765. பிலவ ஸ்ரீ 1843.

'கவர்ன்மெண்ட் பாங்கி ஹெட் மானேஜர் அக்கம்மாள் பேட்டை வேங்கடாசல செட்டியார் கேட்டுக்கொண்டபடி சென்னைக் கல்விச் சங்கத்துப் புலவர் வேங்கடாசல முதலியாரால் 14 பிரதிகளைக் கொண்டு பிழைகளைத் திருத்தித் தமது சரஸ்வதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இவரது முக்கிய இஷ்டர் ஆயலூர் பொன்னுரங்க முதலியாரால் நிறைவேறினது' என்ற குறிப்பு உள்ளது.

1844 ஆம் ஆண்டில் ஆரணிய காண்டமும், பாலகாண்டமும், 1859 இல் சுந்தர காண்டமும், 1864 இல் கிட்கிந்தா காண்டமும், 1863 இல் யுத்தகாண்டமும் உரையில்லாமலே, அச்சிடப்பெற்று வெளியிடப்பெற்றிருக்கின்றன.

இனித் தொடர்பாகக் கம்பராமாயண மூலநூல்கள், குறிப்புரை, பொழிப்புரை, பதவுரை, விளக்கவுரை, ஆகியவற்றைத் தனித் தனியே உடைய நூல்கள், சுருக்க நூல்கள், உரைநடைநூல்கள், டி. கே. சி. பதிப்பு, மர். ரே. பதிப்பு, ஆழ்வார் திருநகரிப் பதிப்பு, அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையப் பதிப்பு, கோபால கிருட்டிணமாச்சாரியார் பதிப்பு முதலியனபற்றி எழுதப் பெறும்.

வ. சு.

(தொடரும்)

சிவஞானபோத ஆராய்ச்சி

[அருட்டிரு அழகரடிகள்]

(சிலம்பு ௩க, பரல் அ, பக்கம் ௩கூஅ இன் தொடர்ச்சி)

இரண்டாம் பிரிவு :

முதல் நூற்பாவின் இரண்டாம் பிரிவு, 'ஆணையின் இருவினையின்' என்பது ;

'ஆணையினால் இருவினையால்' என்பது இதன் பொருள். இருவினை காரணமாக உயிர்களுக்குப் பிறவி உண்டாதலால் 'இருவினைகள்' கூறப்பட்டன.

மேற்கோள் :

இருவினைகளும் உயிரற்ற 'சடப்'பொருள். ஆதலால், அவற்றை இயக்குவதற்கு முதல்வன் ஆணை தேவை; முதல்வன் ஆணையினால் இருவினைகள் இயங்க, அவ்விரு வினைகளுக்கு ஏற்றபடி பிறவி உண்டாகும் என்பது கருத்து. ஆதலால், 'இருவினை முதல்வன் ஆணையால் வரும்' என்று ஆசிரியர் இந்தப் பிரிவில் மேற்கோள் எடுத்துக் கொண்டார்.

வினைகளுக்கேற்பப் பிறவி எடுப்பதும் அவற்றின் பயன்களை அப் பிறவியிற் பொருந்தும் உடம்பைக் கொண்டு புசிப்பதும் உயிர்களேயாதலால், 'ஆன்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையின் வரும்' என்று ஆசிரியர் மேற்கோள் கூறினார். இதனால், 'அவையே தானேயாய்' என்னும் முதற்பிரிவில் வரும் 'அவை' என்பது, சிறப்பாக உயிர்களைக் குறிக்கும் என்பது பெறப்பட்டது.

பிரிவுகளின் இயைபு, கருத்து இயைபு, கருத்தைப் புலப் படுத்தும் நூற்பா இயைபு, அதிகார இயைபு, நூல் இயைபு என்னும் ஐவகை இயைபுகளில் கருத்தியைபு சிறந்ததாதலின், 'புனருற்பவம் வருமாறு உணர்த்துதல்' இந் நூற்பாவின் கருத்தாகக் கூறப்பட்டது. அது, 'ஆணையின் இருவினையின்' என்னும் இருவகைக் காரணங்களோடு இங்கே புலப்படுத்தப் படுகிறது.

பாச உண்மைகள் :

இவ்வாற்றால், 'இருவினை' என்பதும், இவை சேர்ந்து கிடக்கும் 'மாயை' என்பதும், இவ்விரண்டுக்கும் காரணமான

'ஆணவம்' என்பதும் ஆக மும்மலங்களின் உண்மையும் அறிந்து கொள்ளப்படும். மலங்களின் உண்மை புலப்படுதலால், இரண்டாம் நூற்பாவின் பொருள் பாச உண்மை கூறுவது எனப்பட்டது.

துணைக் காரணங்கள் இரண்டு :

மேலும், உயிர்களுக்குப் பிறவியை உண்டாக்குவோன், நிமித்த காரணனுதலால், முதற்காரணமாகிய மாயையைக் கொண்டு அவன் நிகழ்த்தினுலும், தொழில் செய்வானுக்குத் துணைக் காரணமும் வேண்டப்படும் என்னும் அவாய் நிலை எழுகிறது. அதனை நிறைவு செய்வது, இரண்டாம் நூற்பாவின் கடமையாயிற்று. இரண்டாம் பிரிவில் அதனை 'இருவினையின் ஆணையின்' என்று புலப்படுத்துகிருர் ஆசிரியர்; 'இருவினை', 'ஆணை' என்னும் இரண்டும் உலகத்தோற்றத்துக்குத் துணைக் காரணங்களே !

ஆணை என்பது அருள் என்னும் அம்மை; இறைவன், தன் அருளிற் சார்ந்து இயக்க அருள் வினைகளோடு இயைந்து இயக்குதலால், வினைகளின்படி பிறவி உண்டாவதற்கு இடமாயிற்று.

பிறவியில் வருவதென்பது, முன் பிறவிகளில் ஈட்டிய வினைகளை நுகர்ந்து ஒழிப்பதானதனுல், உயிர்கள் பிறவியில் வருதல் ஒரு தண்டனையே. இத் தண்டனையால் உயிர்கள் திருந்தி முன்னேறுதற்கு வாய்ப்புண்டு. இது சிறைவைத்தலைப் போன்றது. 'பாடி காவல்' என்றும் இத் தண்டனை கூறப்படும். 'கோடி காவனைக் கூருத நாளெலாம் பாடி காவலில் பட்டுக் கழியுமே' என்னும் அப்பர் தேவாரத்தாலும், 'பாடி காவல்' என்பது 'சிறையிற் காவல் வைப்பது' என்று பொருள் தருதல் காணலாம்; இறைவனது ஆணை இங்ஙனம் அறத்துக்கும் மறத்துக்கும் பயன்படுகிறது. 'அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை' என வரும் திருக்குறளாலும் ஈதுணரப்படும். உயிர்கள் உய்ய வேண்டும் என்னும் கருணையால் பிறவியிற் சிறை பிடித்து, முன் இருவினை வழியே புசிப்புத் தந்து காவல் காத்துக் கொண்டிருத்தலின், இம் மறச் செயலும் அருளுடையதாயிற்று.

"எம்பெருமான் நின் விளையாட்டு என்சொல் கேன்நான்
ஏதுமறி யாச் சிறியேன் எனைத்தான் இங்கே
செம்புனலாற் குழைத்த புலாற் சுவர்சூழ் பொத்தைச்
சிறுவீட்டில் இருட்டறையிற் சிறைசெய்து, அந்தோ,

கம்பமுறப் பசித்தழலுங் கொளுந்த அந்தக்
கரணமுதற் பொறிபுலப்பேய் கவர்ந்து சூழ்ந்து
வம்பியற்றக் காமாதி அரட்டரெலாம் மடிபிடித்து
வருத்த வென்றோ வளர்த்தாய் எந்தாய்!"

என்று, இறைவனது மறக் கருணையை வள்ளலார் விளக்கமாகத் தெரிவிக்கின்றார்.

இறைவன் தன் 'ஆணை'யால் உயிர்களுக்குப் பிறவி தருகிறான் என்பதோடு நில்லாமல், 'இருவினைகள்' அதற்குக் காரணமாகும் என்பதும் எதற்கு? எல்லாம் வல்ல இறைவனுக்கு ஆணை அல்லது அருள் என ஒன்றும், 'இருவினை என ஒன்றும், இரண்டு துணைக் காரணங்கள், தேவையா? இவற்றுள் ஒன்றே போதாதா?' எனக் கேட்கத் தோன்றும். 'இறைவனே எல்லாம் வல்லவன். அவனுக்குத் துணைக் காரணங்கூட வேண்டுமா? முதற் காரணமாகிய மாயை ஒன்றே போதாதா' என்றும் 'பரிணாமவாதிகள்' கேட்பர்.

ஏது :

முதற்காரணமே போதாதா என்பதற்கும், துணைக் காரணம் இரண்டு வேண்டுமா என்பதற்கும், விடையாக ஆசிரியர் மெய் கண்டார் ஓர் ஏதுக் கூறுவார்.

ஒரு நாட்டைக் காக்கும் மன்னன், தவறு செய்கிறவர்களைத் தன் கீழுள்ள அதிகாரிகளுக்கு ஆணைகளைத் தந்து பாடி காவலிட்டாங்கு அவை அவனது 'ஆக்கினை' என்பது அவர் காட்டும் ஏது.

வேந்தன் மக்களைத் தண்டித்தலைத் தானே செய்வதில்லை. பாடி காவலிடுவதற்குத் தன் கீழ் உள்ள ஒருவர்க்கு ஆணை தருவான். அப்படி, எல்லாம் வல்ல இறைவனும், பிறவிகளாகிய தண்டனைகளை உயிர்களுக்குத் தர, ஆணை தருவான்; அந்த ஆணை, பாடி காவலில் இடுவதற்கு மற்றவர்க்கு உதவும்.

என்ன வகையில் பாடிகாவலில் இடவேண்டும் என்பதற்கு, அவரவர் செய்த செயல், வகை காட்டும். அவரவர் செயல் வேறுபாட்டை உன்னாமல் இறைவனது ஆணை ஒரே வகையாய் இராது. ஆணை தருவதற்கு அவரவர் வினையும் வேண்டும், ஆணையும் வேண்டும். இந்த இரண்டையும் துணைக்கொண்டு ஒரு தலைவன் தன் ஆட்சியை நடத்துவான்.

பிறவி என்பது உயிர்களுக்கு உரியது; அவரவர் வினையைப் போற் பிறவி அமையும். ஒரே வகையாய் அமையாது.

ஆதலால், வினை ஒரு துணைக் காரணம். அத் துணைக்காரணம் இல்லையென்றால், பிறப்பிக்கும் தொழிலை இறைவன் ஏன் செய்ய வேண்டும்? கருணை வடிவினனாதலால், ஒருவர்க்குச் சிறு துன்பமும் மற்றொருவர்க்குப் பெருந்துன்பமும் அவன் தர மாட்டான். அவரவர் வினையே காரணம் என்றிருந்தால், இறைவனது நடு நிலைக்கும் கருணைக்கும் இழுக்கில்லை. அவன் உரிமைக்கும் இழுக்கில்லை. பிறப்பை உண்டுபண்ணும் ஆற்றல் அவனது உரிமையை எடுத்துக் காட்டலாம்; 'உரிமை இருக் கிறது, எல்லாம் செய்ய முடியும்' என்று இறைவன் செருக்கி நடப்பதில்லை; அவரவர் வினைப்படி பிறவிகளை அவன் நடத்து வான்; 'வினை' என்னும் துணைக் காரணம் அதனால் இறைவற்கு இன்றியமையாததாயிற்று!

வினைகளின் நடைமுறை:

இறைவனோ மிகு நுட்பமானவன்; அவன் உயர்வு, மிகத் தாழ்வாகிய பரிய வினையினிடத்தில் நேரே படியாது. ஒரு வேந்தனைப் போல் கீழ்நிலையிலுள்ள அதிதேவர்க்கு ஆணை தந்து தொழிலை நிறைவேறச் செய்வான். அந்த ஆணையும் நுட்ப மானது; ஆனதனால் நுட்ப அதிதேவர்களிடமே இயங்கும். அதற்கு அந்த 'ஆணை'யுடன் இறைவன் ஒன்றியிருப்பான். இறைவன் ஒன்றியிருப்பது முதன்மையாகிறது. ஆதலால், ஆணை என்னும் துணைக் காரணமும் அவன் தொழிலுக்குத் தேவைப்பட்டது. அந்த ஆணையின் மூலம் இருவினைகளை இயக்குவித்து அதி தேவர்களைக் கொண்டு பிறவிகளை இறைவன் அமைப்பான்.

இருவினைகள் என்பவை பிறவிக்குக் காரணமாய் இருத்த லால், அவை முன்பிறவிகளில், உயிர்களால் ஈட்டப்பட்டவை என்று தெரிகிறது. பல பிறவிகளில் இருப்பு வினையாயிருந்து முன்பிறவியில் அவற்றிற் சில ஏறுவினைகளாய் மாறின. இப் பிறவியில் அவை ஏன்ற வினைகளாயின. பிறவியில் துய்க்கத் தக்கபடி ஏறு வினைகளாய்ப் பல பிறவிகளில் உயிர்களால் ஈட்டப் படுமாயினும், அவற்றிற் சிலவே ஏன்ற வினையாய் அமையும். மற்ற ஏறு வினைகள் பலவும் இருப்பு வினைகளோடு சேர்ந்து தொக்குக் கிடக்கும்.

காரணம், செய்யப்படும் வினைகளெல்லாம் ஒரு பிறவியி லேயே ஏன்ற வினைகளாய் வந்து துய்க்கப்பட்டு முடியா. அப்படித் துய்ப்பதானால், உயிர்கள் தாங்கமாட்டா. அளவா யிருக்கும்போதே, பிறவியிற் பெருந்துன்பங்களைக் காண்கிறோம். எல்லா ஏறு வினைகளும் ஏன்ற வினைகளாய்ப் பிறவியில் மாறுவ தென்றால் எப்படித் தாங்க முடியும்? இரக்கம் மிகுந்த இறைவன்,

இவ்வியல்பை அறிந்து, ஒவ்வொரு பிறவியிலும் ஒவ்வோர் அளவே வினைகளை இயக்கி அமைப்பான்.

மற்றொரு காரணமும் உண்டு. வினைகளெல்லாம் அவற்றைச் செய்த உடனேயே பயன்தருவதும் இல்லை; சில உடனே பயன்தரும்; சில, சில காலம் பொறுத்துப் பெருகி வந்து பயன்தரும் நெல் விளைச்சல் தோன்றுவதற்கு நாலைந்து மாதத்துக்கு முன்பே விதை விதைக்கிறோம், அல்லது நாற்று விடுகிறோம். 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்று பெரியோர் கருதியது இதன் பொருட்டே. நல்வினை செய்தாலும் அது பெருகிப் பின்னொரு காலத்தில் நலம் விளைக்கும். தீவினை செய்தாலும் அப் பெருக்கம் உண்டு.

உடனே பயன் தருவதானால் அது சிறிதாகவே கூடுதல் கொள்ளும். பிறவிகளிற் செய்யும் ஏறு வினைகள், அதனால் உடனே மறுபிறவியில் துய்ப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. ஒவ்வொன்றும் பயன் தர ஒவ்வொரு பக்குவமும் அதற்கேற்ற காலமும் உள்ளனவாதலால் பிறவிகள்தோறும் வினைகள் தொகுப்புண்டு இருப்பு வினைகளாய் நிற்கின்றன. முள்ளங்கிப் பயிர் ஒரு மாதத்தில் பயன் தரும். நெற் பயிர் நாலைந்து மாதத்தில் பயன் கொடுக்கும். தென்னை முதலிய மரங்கள் பயன் தருவதற்கு நாலைந்து ஆண்டுகள் செல்லும். பனைமரம் பயன் அளிக்க இருபது ஆண்டுகள் கூட ஆகும். அவைபோல, ஒரு பிறவியிற் செய்த வினைகள் மறுபிறவியிற் பயன் தருவதும் உண்டு. பல பிறவிகள் கடந்து மற்றொரு பிறவியிற் பயன் தருவதும் உண்டு. இவ்வாறு பலவேறு வகையில் பயனுக்குக் காலம் தாழ்வது, அவை பக்குவப்படும் பொருட்டே. அஃதாவது பயன்தரத் தகுந்த தகுதியை, அடையும் பொருட்டேயாம்.

இன்னொரு காரணமும் அதற்கு உண்டு. செய்யும் வினைகளிற் சில கனவு முதலிய உடம்புகளில் வந்து, இன்பதுன்பப் பயன் தருதலும் உண்டு. நனவில் ஒரு வினை செய்தால், அந் நாள் இரவிலோ சில நாட்களிலோ கனவில் அதன் பயனை உயிர்கள் நுகரும். நன்மை செய்தால் நன்மையாகவும் இன்பமாகவும் கனவு இருக்கும்; தீமை செய்தால் கனவில் தீங்காகவும் துன்பமாகவும் அமையும்.

பிறர்க்குச் செய்த வினைகள் நன்மையாய் இருந்தால் அப் பிறவியே செழிப்பாகவும் இன்பமாகவும் இருக்கும்; தீங்குகள் செய்தால் செழிப்புக் குறைந்து நோய் பெருகி மரபுங் கெட்டு உயிர்கள் துன்புறும்; சிலர்க்கு மறுபிறவியில் அவர்களை வினை தொடர்வதோடு தம் மரபினர் வாழ்க்கைக்கும் நலந் தீங்குகள்

விளைப்பதுண்டு. தம்மைச் சார்ந்த உறவினர்க்கும் தம்மைச் சார்ந்த சூழலில் உள்ளவர்க்கும் நலம் தீங்குகள் அமையக் கூடும். 'அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்.' 'தீப்பால தான் பிறர்கண் செய்யற்க, நோய்ப்பால தன்னை அடல்வேண்டா தான்' என்னும் மறை மொழிகளாலும் இவ்வுண்மை விளங்கும்.

வேருெரு காரணமும் இங்கே நாம் நினைக்க வேண்டும். ஒரு பிறவியில் செய்த வினை, உயிர் உடலை விட்டு நீங்கியதும், நுண்ணுடம்பு கொண்டு தேவ உலகங்களிலும் நரகங்களிலும் பயன் தரும்; தேவ உலகங்களிலும் நரகங்களிலும் நுகர ஏலா தனவாய் மண்ணுலகத்திலேயே நுகரக் கூடியனவாய் உள்ள சில எஞ்சிய வினைகளை, மறுபிறப்பில் அல்லது வேறு பிறப்புகளில் உயிர்கள் நுகர்வதும் உண்டு.

தேவ உலகங்களில் நுகரத் தகுந்த நல்வினையானுல் அதனைத்தேவ உலகத்தில் மட்டும் நுகர முடியும். நரகங்களில் நுகரத் தகுந்த தீவினைகள் நரக உலகங்களில் மட்டும் நுகர முடியும்.

செய்த ஏறு வினைகளில் ஒளியுடம்புகளின் (பூதசார உடம்பு களின்) வாயிலாகவும் இருள் உடம்புகளின் (யாதனு சரீரம்) வாயிலாகவும் நுகர்ந்த பின், வினைப்பகை வீயாது சென்று அடுமாதலால் மண்ணுலகத்தில் மட்டும் எழுமை எழு பிறப்பு களிலுங் கூட அவை தொடர்ந்து வரும். பல பிறவிகளில் இடை விட்டும் வரும். இவை யெல்லாம், ''ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப் புடைத்து'', ''ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும் தான்புக் கழுந்தும் அளறு'' என்னும் பொய்யா மொழிகளாற் பெறப்படும்.

இவ்வாற்ருல், இருவினைகள், முற்பிறப்புகளில் தொகுப் புண்டு மொத்தமாய் 'இருப்பு வினை' எனவும், ஒரு பிறவியில் மட்டும் 'ஏன்ற வினை' எனவும், அவற்றை நுகரும்போதே மேலும் வினை செய்தலால் அவை யெல்லாம் மறுபிறவியில் அல்லது வேறு பிறவிகளில் 'ஏறும் வினை' எனவும்முத்திறப்படு தல் காண்கின்ருேம். ஒருவன் மற்ருெருவனை இகழும்போது அதனை முன் வினையின் பயன் என்று எண்ணுமல், திருப்பி இகழ்ந்தால் அது வினையாகி ஏறு வினையாம்.

ஒரு செயலைச் செய்யும்போது, அதைச் 'செய'லென்றே எண்ணுவோம். பயன் தரும் வகையில், கதிர் முற்றி நிற்பது போல அது பெருகி நின்ருல், முதிர்ச்சி யடைந்த பக்குவத்தில் அச் செயல் 'வினை' எனப்படும். இவ் வினைகள் நிழல் போலத் தொடர்ந்து வந்து தம் பயனை விளைத்துவிடும்.

இத்தகைய இருவினையை, அவை தொகுப்பு வினையாய் (சஞ்சிதமாய்) இருக்கும் போதே, அழித்து விட வாய்ப்புண்டு. குருவின் திருவருள் பெற்றால், அத் திருவருள் அதனை அழித்து விடும்; பிறவியில் நுகர்வதற்கென்று அமைந்துவிட்ட ஏன்ற வினையை எப்படியோ நுகர்ந்துதான் தீர்க்க வேண்டும்.

அந் நுகர்வில் சிறிதே தாக்குதலும் பெரிது தாக்குதலும் என இருவகை உண்டு. சிறிது தாக்குதல் என்பது முயற்சியால் ஆவது. தவ முயற்சியும் முயற்சி எனப்படும். 'ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்.' இது வினையை எதிர்த்து முயல்பவர் நிலை!

பெரிதாக நுகர்ந்து தீர்ப்பதானால், 'வானகம்', 'அளறு' 'மண்ணகம்' என்பவற்றில் அவரவர் வினைகளுக்கேற்றபடி வினைப்பயனை மக்கள் நுகர்வர். எதிர்க்கும் ஆற்றல் அற்றவர் நிலை இது!

சிலர் வானகத்தில் நலம் அடைய வேண்டிப் பிறந்த பிறப்பில் அறங்கள் செய்வதுண்டு. "செல்விருந்து ஓம்பி வரு விருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு" "பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு."

விளைவு கருதாமல் சிலர் தீவினை செய்து நரகம் எய்துவர். "அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்".

சிலர் மண்ணிற் பல பிறவிகள் எடுத்து நலந்தீங்குகள் எய்துவர்; 'புக்கில் அமைந்தின்று கொல்லோ, உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு'.

வினைகள் இங்ஙனம் பல வகையிற் பிறவிக்கு இன்ப துன்பங்கள் கொடுக்கும். இவ்விரு வினையும் அற்று, இன்ப துன்பங்கள் நீங்கி, அறத்திறன் பேணி, உயர்ந்த பேரின்ப உணர்வில், வினைப்பிறவி நீங்குவதே, உலகிற் பிறத்தலின் பயன். வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன் வாழ்நாள் வழி யடைக்குங் கல்லாய் அமையும்.

எது நன்னிலை ?

நல்வினை தீவினை என இருவினைகளும் செய்யா விட்டால், ஒருவன் வேறு என்ன செய்துகொண்டிருக்க முடியும்? நல்ல காரியங்கள் செய்யாவிட்டால் மக்கள் சோம்பேறிகளாகி விடுவார்களே; அதுவா நன்னிலை? அப்படி யிருப்பதா தெய்வச் சேர்க்கை? திருவடி நிலை? என்று சிலர்க்கு ஐயம் உண்டாகும்.

'சும்மா இருக்கும் நிலை'யாகிய அது காரியங்கள் செய்யாத நிலையன்று! அது, 'பற்றற்றுச் செய்யும் நிலை'. பயனை எதிர்

பாராமல், கடமைகளைச் செய்து கொண்டிருந்தால், நல்வினை தீவினையாகிய இருவினைகளும் ஆகாமல், தெய்வச் செயலாய் அமையும். அந் நிலையில் எய்துவது பேருணர்வு நிலையாதலால் அது பேரின்பம் என்று இன்பப் பெயரால் வழங்கப்பட்டது. மற்றப்படி அது உணர்வற்றதோர் உணர்வு நிலை! அதில் வரும் இன்பம், துன்பத்துக்கு எதிராக வரும் இன்பம் அன்று; அதனினும் மேம்பட்ட நிலையாகும். அந் நிலையை எய்துவதே முயற்சி நிலை; ஊழை எதிர்க்கும் வாழ்க்கை; வினையற்ற நிலை! நஞ்செயலற்று நாம் அற்ற நிலை!

மலங்களின் நிலை:

இனி இவ்விரு வினைகள் மாயையிற் கட்டப்பட்டிருக்கும் என்னுங் கருத்தும் ஆய்ந்து பார்ப்பதற்குரியது.

மாயை என்னும் மூலப் பொருளால் நமக்கு உடல், கருவிகள், உலகம், நுகர்பொருள்கள் எல்லாம் கிடைக்கின்றன. பிறவியில் இவை கிடைத்தலால், இவற்றைக் கொண்டு, வினைகள் செய்யப்படுகின்றன. இங்ஙனம் வினைகள் 'மாயேயம்' என்னும் மாயைப் பொருள்களால் உண்டாவதனால் மாயையிற் கட்டப்பட்டவை எனலாம்.

ஆணவ மலப் பிணிப்பு, மாயை மலப் பிணிப்பால் ஒடுங்கும்; அழுக்கேறிய ஆடையை வெளுக்கும் வண்ணான், உவர் மண் சாணம் முதலிய வேறு அழுக்குகளை அந்த அழுக்காடையிற் சேர்ப்பது போல, ஆணவமல அழுக்குச் சேர்ந்த ஆன்மாவை அவ் வழுக்கு நீங்கும் பொருட்டு இறைவன் மாயை மலத்தை இடையிற் சேர்ப்பான். 'மலம் மலத்தால் கழுவுவன் என்று சொன்ன காரணம் என்ன வென்றால், செழுநவை அறுவை சாணி உவர் செறிவித் தழுக்கை முழுவதும் கழிப்பன் முன்னோன்.'—சிவஞான சித்தியாரில் இவ்வாறு கூறப்பட்டது. 'மாயைகொடு மலமொழிப்பன் முன்னோ'தலால், அவன் பேரருளே எல்லாவற்றிற்குங் காரணமாகும்; அதனால், தன்னில் தங்கிய வினையோடு மாயை, இறைவன் அருளில் முடிவாக ஒடுங்கிவிடும் எனப்பட்டது. இவ்வாறு மலங்கள் அறும் என்க.

எடுத்துக் காட்டுக்கள்:

இனி, இவ்விரண்டாம் பிரிவின் எடுத்துக்காட்டு வெண்பாக்களைக் காணலாம். இரண்டாம் பிரிவுக்கு மூன்று எடுத்துக் காட்டு வெண்பாக்கள் உள்ளன. மூன்றிலும் முறையே, விளை நிலமும், காந்தம் இரும்பும், உமி களிம்புகளும், உவமைகளாக வந்தன. வினை உண்டென்பதற்கும், பிறவிகளில் அஃது இன்ப

துன்பப் பயனும் வரும் என்பதற்கும், ஏறு வினை உண்டா தற்கும், முதல்வன் தேவை என்பதற்கும், விளக்கம், முதற் செய்யுளில் வருகின்றது.

உள்ளதே தோற்ற உயிரணையும் அவ்வுடலின்,
உள்ளதாம் முற்செய்வினை உள்ளடைவே;—வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளைக்குஞ் செய்யேபோற்
செய்பவன்; செயல்அணையா சென்று.

பொருள்: உள்ளதே தோற்ற உயிரணையும் அவ்வுடலில்—உள்ள பொருளாகிய முன்வினை உடம்பைத் தோற்றுவிக்க உயிர் அதனிற் சேரும்; முன்செய்வினை உள்ளடைவே உள்ளதாம். முன் செய்த வினைகளை நுகரும் முறையிலிருந்தே ஏறும் வினை உள்ளதாகும்; செய்பவர் செய்திப் பயன் விளைக்கும் செய்யே போல்—உழவு செய்பவரின் திறமான தொழிலுக்கு ஏற்ப விளைவு தரும் நிலம் போல; வள்ளலவன் செய்வன்—ஆண்டவன் அவ ரவர் வினைகளுக்கு ஏற்றபடி வினைப்பயன் தருவான்; செயல் அணையா சென்று—வினைகள் அறிவற்றவையாதலால் தாமே சென்று உயிர்களைச் சேரமாட்டா.

உள்ளதே தோற்ற என்றார், இல்லது தோன்றாதாதலின்; உள்ளது என்பது இங்கே தொகுப்பு வினை; அதிலிருந்து சில வினைகள் ஏறு வினைகளாய் உடலின் தோற்றத்துக்குக் காரணமாதலின், 'உள்ளதே தோற்ற' என்றார். தோற்ற—தோற்றுவிக்க; உள் அடைவு—உள்ளும் அடைவு; நுகரும் முறைமையில். ஏறுவினை உள்ளதாம் என்க.

வள்ளலவன் என்பதில், 'அவன்' பகுதிப்பொருள் விகுதி யாய், வள்ளல் தன்மையைச் சிறப்பித்தது. கடவுளே மற்றவர் களைவிட வள்ளலாவான்; தனக்கென யாதுமின்றி உயிர்கள்பால் வைத்த அருள் காரணமாகப் பிறவிகளை உண்டாக்குதலாலும், அதற்காக இரக்கத்தால் வினைகள் இயங்க உதவுதலாலும் 'வள்ளல்' எனப்பட்டான். இச் செயலை ஏனை வள்ளல்கள் செய்யமாட்டுவாரல்லர்.

'செய்பவர்' உழுதொழிலாளர்; 'செய்தி' அவரவர் உழைப் புத் திறத்தாலாகிய தொழில் செய்யேபோல்—பண்ணை நிலமே போல; மாந்தர் செய்தற்குரிய செயல் உழுதொழிலேயாதலால், அத் தொழிலை உழவர் செய்யும் நிலமும் 'செய்' எனப்பட்டது. பண்ணுதற்குரிய தொழில் அதுவேயாதலின் 'பண்ணை' எனவும் கூறப்படும்.

'செயல்' அணையா சென்று என்பதில் 'செயல்' என்றது இருவினைகள்; 'அணையா' என்னும் பன்மையால் செயல்

என்பதற்கு 'இரு வினைகள்' எனப் பன்மையாகவே கூறப்பட்டன. வினைகளுக்கு அறிவில்லையாதலின் தாமே உயிர்களைப் போய்ப் பொருந்தா; ஆதலின், சென்று அணையா என்றார்.

'உள்ளதே தோற்ற' என்றதனால், 'வினை உண்டு' என்பது பெறப்பட்டது; 'முற்செய் வினை' என்றதனால், 'இப் பிறப்பில் உயிர்களுக்குப் பயனாய் வருதல்' தெரிந்தது; 'உள்ளும் அடைவே உள்ளதாம்' என்றது, 'ஏறுவினை உண்டாதற்குக் காரணம்' கூறிற்று. 'செயல் அணையா சென்று' என்றதனால், 'முதல்வனது இன்றியமையாமை' தெரிந்தது.

வினைகளின் தொகுப்பாகிய இருப்பு வினைகளிற் சில, ஏன்ற வினைகளாய்த் தம் பயனாகிய இன்ப துன்பங்களைக் கொடுப்பதற்குக் காரணமாயினும், அப் பயனுக்கு ஏற்ற உடம்பு உண்டாதற்கும் ஏதுவாதலின், 'அவ் வுடல்' என முன்னறி சுட்டாய் 'அகரம்' வந்தது. 'உள் அடைவே' என்பதற்கு உள்ளும் முறைமையிலே எனப் பொருளுரைக்குமிடத்து, ஏறு வினை என வருவித்தல் வேண்டும். செய்யேபோல் செய்வன் எனப்பட்டமையால் முதல்வனுக்குச் 'செய்' உவமையாயிற்று. செய், நிமித்த காரணம்; செய்தி, துணைக்காரணம்; விதை, முதற்காரணமாகும்.

பயனை விளைப்பது நிமித்த காரணமாகிய செய்களின் நிலைமையேயானாலும், உழவு செய்பவரின் செயல்திறனுக்கு ஏற்ப அது பயன் தருவதாகும் என்பது வெளிப்படை. அது போலச் செய்பவன் நிமித்தகாரணனாகிய கடவுளேயானாலும், அவரவர் வினைகளுக்கு ஏற்பப் பிறவியை அமைக்க வேண்டுமாதலின், தானே செய்யான் என்பதற்கு இங்ஙனம் உவமை கூறப்பட்டது.

அவ்வினையைச் செய்வதனில் அவ்வினைஞர் தாஞ்சென்றங்
கவ்வினையைக் காந்த பசாசம்போல்—அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு.

வினைகளுக்கு அறிவில்லையானாலும் உயிர்க்கு அறிவிருப்பதனால், அவை, தாம் செய்த வினையைத் தாமே எடுத்துக் கொள்ளலாமே என்றும் கேட்கத் தோன்றும். இரும்பைத் தன்னிடம் இழுத்துக் கொள்வது காந்தந்தான். காந்தத்திற்கு அவ்வாறு இழுத்துக் கொள்ளும் இயல்பு இருக்குமானாலும், இரும்பும் காந்தமும் அருகருகே இருக்கும்படி அறிவுடைய

வேறொருவர் அவ்விரண்டையும் சேர்த்து வைத்தாலல்லாமல் காந்தம் இரும்பை இழுக்காது. அதுபோல வினைகளைச் செய்த உயிர்க்கு அவ்வினைகளை அதனிற் சேர்த்து வைக்கப் பேரறிவுடைய கடவுள் வேண்டும். அங்ஙனம் செய்யக் கடவுளைத் தவிரப் பேரறிஞர் யாரும் இல்லை. இக்கருத்து இச் செய்யுளில் வருகின்றது.

பொருள் : அவ்வினையைச் செய்வதனில்—முன் இருவினைகளைப் பயன் செய்வதற்கேற்றபடி எடுத்த உடம்பில், அவ் வினைஞர் தாம்சென்று-அவ்வினைகளைச் செய்தவர்கள் சென்று; அங்கு-அப் பிறவியில்; அவ் வினையை - செய்த அவ் விருவினைகளை; காந்த பசாசம் போல் - அருகில் ஒருவன் எடுத்து வைக்க ஒட்டிக் கொள்ளும் காந்தமும் இரும்பும் போல, அவ் வினையைப் பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல், இருவினைப் பயன்களைத் தவறுபடாமல் ஊட்டி வைக்கும் முதல்வனால் நுகரார் என்றால், ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு - பிறவியில் வேறு யார் தாம் இயல்பறிந்து உயிர்களோடு வினைகளைச் சேர்ப்பார்? (வேறு எவரும் இல்லை.)

அவ் வினையை அவ் வினைஞர் என்ற இடங்களிலெல்லாம் அகரச்சுட்டு வருவது முன் இருவினையை எனச் சுட்டியபடி; செய்வது, பிறவியிற் செய்யப்பட்ட உடம்பு; அங்கு என்றும் ஆங்கு என்றும் இரண்டு இடத்தில்வந்தது, உவமையில் ஒன்றும் பொருளில் ஒன்றும் வந்தபடி; இன்ன வினைக்கு இன்ன பயன் என்னும் இயல்புபடியும், இன்னவினை இன்னாருடையது என்னும் இயைபுபடியும் தவறாமல் ஊட்டுதலைப் 'பேராமல் ஊட்டுதல்' என்றார். 'நுகராரேல்' என்று உயர்திணையாற் கூறினார், மக்களை நினைந்து; அறிவுப் பொருளாயிருந்தும் தாம் செய்த வினைகளைத் தாமே எடுத்து நுகரமுடிவதில்லை என்று அவர் அறிவின் குறையை எண்ணினார். 'அறிந்து அணைப்பார்' என்றதனால் பேரறிவுத் திறம் இங்கே முதன்மையாயிற்று.

அவ் வினை என்பது பின்னும் பின்னும் வந்தமை, சொற்பொருட் பின்வரும் நிலை, 'முன் இருவினை' என்னும் ஒரே கருத்தைக் குறித்து வந்தன. பெருமான் ஒருவனைத் தவிர மற்றவர்களெல்லாம் அறிவிக்க அறியும் உயிர்களாதலின், அவற்றிற்கு 'இயற்கைப் பேரறிவு' இல்லை என்பார், 'ஆர்தாம் அறிந்து அணைப்பர்' என்றார். உயிர்களில் எவ்வளவு அறிவு மிக்கவராலும் தம் வினைகளைத் தாமே சேர்த்துக் கொள்ளுதல் முடியாது என்பது இதனாற் பெறப்படுதலால், கடவுளின் இயற்கைப் பேரறிவு உயிர்களின் அறிவுக்கு வேறானது என்பது தெளியப்படும்.

அப்படியானல், உயிர்களுக்கு உண்டாகும் இருவினைகள் எப்போது தோன்றின என்று அறிந்துகொள்ள ஆர்வம் உண்டாதல் இயல்பே; அதற்காக, மூன்ருவது எடுத்துக் காட்டுச் செய்யுள் வந்தது.

நெல்லிற் குமியும் நிகழ்செம்பி னிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே - வல்லி
மலகன்மம் அன்றுளவாம் வள்ளலாற் பொன்வாள்
அலர்சோகம் செய்கமலத்து ஆம்.

பொருள்: நிகழ் நெல்லிற்கு உமியும் செம்பினிற் களிம்பும் சொல்லில் - வாழ்க்கையிற் புழங்கும் நெல்லுக்கு உமி உண்டானமையும் செம்பிற் களிம்பு உண்டானமையும் சொல்லப் போனல், புதிதன்று - அவற்றிற்கு அவை புதிது சேர்ந்தவை அல்ல, தொன்மையே - பழைமையானவையே; (நெல் எப்போது உண்டானதோ அப்போதே அதற்கு உமியும் செம்பு எப்போது உண்டானதோ அப்போதே அதிற் களிம்பும் உண்டாயின; இடையில் வந்தன அல்ல.) வல்லி மல கன்மம் அன்று உளவாம் - மாயையும் ஆணவ மலமும் இருவினையும் பழைமையாகவே உயிரோடு உள்ளனவாம்; பொன்வாள் - சூரியனது ஒளியினுல், அலர் சோகம் செய் கமலத்து - அலர்தலும் குவிதலும் செய்யப்படும் தாமரை மலரைப் போல, வள்ளலால் ஆம் - கடவுளால் வினைகள் பிறவிகளில் விரிதலும் பற்றற்ற நிலையிற் குவிதலும் உண்டாகும்.

நெல்லுக்கு உமியும் செம்புக்குக் களிம்பும் எப்படி இயற்கையே உள்ளனவோ அப்படியே மும்மலங்களும் உயிர்களிடம் பழைமையாகவே உள்ளன. (உயிரின் அறிவை மறைப்பது ஆணவம்; விளக்கொளிபோல் இடையில் விரிந்து சிறிது அறிவை விளக்குவது மாயை; அப்போது வினைகள் செய்யப் படுதலால் அவற்றின் பயனைத் துய்க்கும் முறையில் மேன்மேல் முயற்சிகளில் உழன்று உயிரறிவை விளக்கத் துணை செய்வது வினைகள். இம் மும் மலங்களையும் விரிப்பதையும் ஒடுக்குவதையும் உயிர்களுக்கு ஆக்க முறையிற் கடவுள் செய்து வருவார். அவர் வல்லவர் என்பது இவற்றை செய்வது தான். சூரியனது ஒளி தாமரை மலரை விரிப்பதும் குவிப்பதும் செய்வதுபோல இறைவன் செயல் நிகழ்கின்றது. இச் செய்யுளின் கருத்து இது.

நிகழ் என்பதை நெல்லுக்கும் கூட்டிக் கொள்க. நெல்லிற்கு உமி அரிசிக்குப் பாதுகாவலாய் உள்ளது. செம்பில் களிம்பு செம்புக்குக் குற்றமாய் உள்ளது. மலங்களில் ஆணவ

மலம் குற்றம். மற்ற இருமலங்களும் உயிர்க்கு விளக்கந் தருத லில் உதவின. ஆதலால், இரண்டு உவமைகள் வந்தன. நெல்லிற்கு உமி புதிதன்று, செம்பினிற் களிம்பும் புதிதன்று எனப் புதிதன்று என்பதைத் தனித்தனி சேர்த்துக் கொள்க. இன்ன காலம் என்று கூற முடியாதவற்றிற்குத் 'தொன்மை' என்பது வழக்கு; 'வல்லி' என்று இங்கே பெண்பாலாக மாயை கூறப்பட்டது, அது இறைவனுக்கு ஒரு சத்தியாதலால் (பரிக்கிரக சத்தி); அன்று, உயிர் என்று உளதோ அன்று! பொன் வாள் சூரியனது ஒளி. அலர் - அலர்தல் என முதல் நிலைத் தொழிற் பெயர். சோகம் - வாட்டம்; பெயர்; இங்கே குவிதலைக் குறித் தது. கமலத்தைப்போல் என்க. இன் உருபு தொக்கது.

வினைகள் எப்போது தோன்றின என்னும் ஐயத்துக்கு அவை 'தொன்மையாகவே உள்ளன' என்பது விடையாயிற்று. இடையில் விரிந்தன, ஒரு காலத்தில் சேட்டையின்றி ஒடுங்கி யும் விடும்; வினைகளைப் பற்றிக் கூறத் தொடங்கியவர், ஆணவ மலம் மாயைமலம் என்னும் மற்ற இருமலங்களையும், இதுவே இடமாகக் கூறிக்கொண்டார். அதனால் மும் மலங்களின் உண் மையும் இங்கே பெறப்பட்டன. மும் மலங்கள் பிறவிகளில் விரி வதும் ஒடுங்குவதும் இறைவனால் என்பதும் இவ்வாற்றாற் பெறப் பட்டது.

மலங்களின் இயல்பு :

இம் மும்மலங்களைப் பற்றியும், இறைவனால் உயிர்களின் நிலை எவ்வாறு மேம்படுத்தப்படுகின்றது என்பது பற்றியும், அருள் இவற்றாலெல்லாம் எங்ஙனம் விளங்குகின்றது என்பது பற்றியும் நாமும் இதுவே இடமாக இங்கே சிறிது எண்ணிக் கொள்ளலாம்.

(1) ஆணவம்

மும்மலங்களுள் 'ஆணவ மலம்' என்பது, உயிர்களின் அறிவை மறைத்து ஒன்றும் அறியாதபடி அறியாமையை விளைக் கிறது; அதனால் அதனை 'இருள் மலம்' என்றும் கூறுவதுண்டு. தொன்மையாய் மறைத்து வருதலால், அது, எதிர்ப்பின்றி ஆண்மையுடன் விளங்குவது கொண்டு 'ஆணவம்' எனப் பட்டது. உயிர்களின் பெருமையை அணுப்போலச் சிறுமைப் படுத்துவதனால் 'ஆணவம்' என்பது பெயராகும் எனச், சிலர் கூறுவர். அச் சொல்லாக்கம் இயல்பாக இல்லை.

உலகத்தில் எங்கும் இருள் இருப்பதைக் காண்கிறோம். சூரியனால் ஒளி உண்டானாலும் அந்த இருள் நிழல்போலவும்

இருக்கிறது; காலின் கீழும் அமைந்து விடுகிறது. அடியின் கீழும் விடாமல் தங்கி விடுவதனுல், ஆணவ மலப் பற்றும் அது போல உயிரைப் பெரிதும் பிணித்திருக்கிறதென்று கூறலாம்.

இருள் என்பது ஒன்றே; ஆணவம் என்பதும் ஒரு பொருளே. ஆணவமும் உயிரும் இன்ன காலத்தில் இயைந் தன என்று தெளிவதற்கில்லை. உயிர் என்ருே, கடவுள் என்ருே, அன்றே ஆணவமும் உள்ளது. அன்றே உயிராற்றலை யும் பிணித்துக்கொண்டு அமைந்திருக்கிறது.

உயிர் அறிவுப் பொருளாயினும் ஆணவத்தின் பேரிரு ளுக்கு முன் அதன் அறிவு தலைக் காட்டவில்லை. இப்போதும் உலகப் பேரிருளில், உயிர் அறிவுடையதானுலும் எந்தப் பொருளையும் காணமுடிவதில்லை. இருள் எல்லாவற்றையும் மறைத்தாலும் கண்ணுக்குத் தெரிகிறது; இந்த ஆணவம் கண்ணுக்குச் சிறிதும் தெரிவதில்லை.

அறிவுத் தன்மையோடு உயிர்க்கு அறியாமையும் தெரித லாலும், இரண்டும் அவ்வப்போதும் உண்டாதலாலும், உயிரும் மலமும் அப்படிச் சேர்ந்திருக்கின்றன என்றே சொல்லவேண்டி யிருக்கிறது. அறிவு அடங்கியிருக்கும் நிலையே அறியாமை என்ருவது, 'அறிவே இல்லாத நிலை' என்ருவது, ஏன் சொல் லக்கூடாது? அறிவா யிருப்பதோடு அறியாமையும் ஆன் மாவின் குணமே என்று கூறினுல் என்ன? 'ஆணவமலம்' என வேருென்று ஏன் கூறவேண்டும்? என்றும் கேட்கத் தோன்றும்.

ஒரே உயிர்ப் பொருளுக்கு அறிவும் அறியாமையும் என மாறுபாடான இரு தன்மைகள் இருப்பது இயல்பாகாது. ஆதலால், ஆணவம் என வேருென்று இருப்பதைச் சொல்ல வேண்டி யிருக்கிறது.

உயிரின் அறிவை இருட்டாக்குவது போல ஆண்டவன் பேரறிவையும் அவ்வாறு செய்யமுடியாமல் இருப்பதனுல், உயிரின் இயல்பை மட்டும் ஆணவ இயல்பு மறைப்பதாய் இருக்கின்றதென்று துணியவேண்டும்.

உயிர்கள் பல தன்மை உடையன. அதனுல் வேறு வேருக, உயிரின் அறிவை, ஆணவம் பிணித்திருக்கின்றது; உயிர்கள் வேறு வேறு இயல்புடையவையாதலால் அவை பலவாயிருக்கின்றன; உயிர்கள் பலவேறு இயல்புடையன என்பது, அவற்றின் எத்தனையோ கோடி முகங்கள் வேறு வேருகவே காணப்படுவதிலிருந்து தெரிகிறது. 'அடுத்தது

காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்'; ஆதலால் இவ்வாறு கூறவேண்டி யிருக்கிறது. ஆன்மாக் களின் அறிவியல்பு வேறு வேருய் இருப்பதனுல், ஆணவ மும் அவற்றை வேறு வேருன வகையில் மறைத்திருக்கிறது.

ஆணவம் ஒரே பொருளாய் இருந்தாலும் அதன் சத்திகள் பல வேருய் அறிவைப் பிணிக்கின்றன என்று சொல்வதைவிட, உயிர்களின் அறிவும் குணமும் பலவேறுபட் டிருக்கின்றன வாதலால் பல வேறு வகையில் அவை பிணிப்புண்டிருக் கின்றன என்பது வலிவுடையது. இயற்கையின் நிலே அவ்வாறு இருக்கிறது; ஏனென்ருல், ஒரு பொருளுக்குப் பல ஆற்றல்கள் கூறுவதைவிடப், பல உயிர்களுக்குப் பல இயல்புகள் இயல் பாகவே அமைந்திருக்கின்றன என்பது சிறக்கும்.

(ii) மாயை

மாயையின் நிலே இனிக் கவனித்தற்குரியது. அது, பரு உடம்பாகவும் உட்கருவிகளாகவும் உலகங்களாகவும் நுகர் பொருளாகவும் தோன்றி வருகின்றன. மாயை முதற் காரணம்; இறைவன் நிமித்த காரணம்; அம்மையும் அவரவர் வினேயும் துணேக் காரணங்கள்.

அம்மையின் செயல்களே உலகங்கள் என்பது, இவை மாயையின் விரிவுகள்; 'மாயேயம்' என்றும் கூறப்படும்.

அம்மை இம் மாயேயப் பொருள்களேத் தோற்றுவிக்கத் திருவுள்ளம் பற்றியதோடு அவற்றில் மறைந்திருந்து, உயிர்கள் அவற்றை விரும்புமாறு இனிமைகளாய் எழில்களாய் விளங்கி, உயிர்களே அவற்றின் மலங்களில் அழுத்தி மயக்கி, மறைந்த அம்மையாய் (திரோதான சத்தியாய்) கவர்ச்சி செய்து உதவுவார். உயிர்கள் தம் மலங்களின் மூட்டத்தால் அவ் வினிமைகளிற் படிந்து, இயற்கையை விரும்பும் இலக்கியக் கலேஞராகிப் பல பிறவிகளில் உழன்று பின்பு, எல்லாம் அருளின் திருவிளேயாடல் எனத் தெளிந்து, அருள் நினேவில் ஒருமையுற்று, அடியாராகி உயர, அம்மை அவற்றை ஆண்டவ னிடம் செலுத்தி ஆண்டவன் நிலேயை வழங்குவார்; எல்லாம் வல்ல இறைவன், பல நாள் அவ்வுயிர்கள் பட்ட நிலேகளுக்கு இரங்கித், தனது பெருநிலேயைத் தந்து உய்விப்பான். பிறத் தலும் பிறப்பறுத்தலும் இவ்வாறெல்லாம் இயங்கி வருதலால், உலகச் செயல்களும் உயிரின் உட்பதிவுகளும் எல்லாம் அம்மை யின் அருளால் நடைபெறுவனவாய் இருக்கின்றன.

அம்மையை இறைவன் இரண்டற இயைந்து இயக்க, அம்மை, உயிர்களில் அதிதேவர்களாய் உயர்ந்தவர்களோடும் மாயேய உலகங்களோடும் அருளம்மையாகவும் (பராசத்தி) மறைப்பம்மையாகவும் (திரோதான சத்தி) இன்னும் வேறு வேறு வகையிலும் இயங்கி, உலக காரியங்களைப் புரிந்து வருவார். உயிர்களிடத்தில் ஞானமாய் விளங்குவதோடு, உலக எழில்களின் கல்வி கலைத்திறமாகவும் மிளிர்வார். திருச்சிற்றம்பலக் கோவையாரில் இவ்வியல்புகளை மாணிக்கவாசகர் உலகியல் நாடகமாக நன்கு விளக்கி யிருக்கிறார்.

எல்லா உயிர்களும், அம்மையின் இந் நிலைகள் தெரிந்து, கல்வியும் கலைகளும் பெறுவதோடு ஞானம் என்னும் மெய்யுணர்வையும் அடைந்து இறைவனை எய்த வேண்டும்.

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு'

உடம்பு, கருவிகள், உலகம், நுகர்பொருள்கள் என்னும் மாயையின் விரிவுகளாகிய மாயேயங்கள் அனைத்தும், பொதுவில், பல வகைத் தத்துவங்களாக, ஆன்றோர்களுக்குப் புலப்படும்.

வழிகள் அறுவகை : (அத்வாக்கள் ஆறு)

இவை ஆறும் 'ஒலிகள்' 'பொருள்கள்' எனவும் இருவகைப் படும். ஒவ்வொரு பொருளுக்கும் உலகத்தில் பெயரொலி உண்டு; வெறும் ஓசையும் உண்டு. அதனால் 'பொருளுலகம்' எனவும் 'ஒலி யுலகம்' எனவும் தத்துவங்கள் கூறப்பட்டன! ஒலி யுலகத்தில் மறைகள், சொற்கள், எழுத்துக்கள் அடங்கும்; ஒளி யுலகத்தில் அதாவது பொருளுலகத்தில், உலகப் பிரிவு களாகிய தத்துவங்கள், அவற்றின் மூலமாகிய கலைகள், அண்டங்களெல்லாம் அடங்கும், மாயை முதலில் மறைகளாகவும், சொற்களாகவும் எழுத்துக்களாகவும், அதன்பின் கலைகளாகவும் பொருள்களாகவும் உலகங்களாவும் தோற்றும்.

(iii) வினைகள்

உலகத் தோற்றம் இங்ஙனம் ஆறு வழிகளாய் (ஆறு அத்துவாக்களாய்க்) காணப்படுகின்றன. அருளை அடைவதற்கு மாயை இந்த ஆறு பிரிவுகள் வழிகளாக இருக்கின்றன. செய்யும் வினைகள் இவற்றில் தங்கும்; குருவருளால் அவற்றையெல்லாம் தூய்மை செய்துகொண்டு, இவ் வழிகளில் ஏற்றம் பெற்றுக் கலைத்திறமும் அருள் திறமும் அடைந்தால் கடைசியில் நிறைவடைந்த அருளால் மேன்மையுறலாம்.

(தொடரும்)

உயிர்மெய்ம்முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

விள்[2]—வெம்மை யொண்மை வெண்மை வெறுமைக் கருத்து வேர்ச்சொல்.

கதிரவன், திங்கள், தீ என்னும் மூன்றும், ஒளி தருவதால் முச்சுடர் எனப்படும். இவற்றுள் முதலதே ஏனையிரண்டற்கும் மூலம்.

உலகம் முழுமைக்கும் பகலில் ஒளிதரும் கதிரவனும், இருண்ட இடமெல்லாம் மக்கட்கு ஒளிதரும் விளக்கும், பூத வகையில் தீயெனும் ஒன்றே. அதன் சிறப்பியல்பு வெம்மை. அதன் விளைவு ஒண்மை அல்லது ஒளிர்வு.

தீ பொதுநிலையிற் சிவந்தே தோன்றுவதால், வெம்மைக் கருத்திற் செம்மைக் கருத்துத் தோன்றிற்று. எ - டு: எரிமலர் = செந்தாமரை, முருக்கு (முண்முருங்கை) மலர்.

கதிரவன் எழுகை மறைகை வேளைகளிற் சிவந்தும் உச்சி வேளையில் வெளுத்தும் தோன்றினும், அதன் வெம்மை மிகுதி யாற் செங்கதிர், செஞ்சுடர், செய்யவன் எனவே படும். ஆயின், இரவனை திங்களோ, எக்காலும் வெண்ணிறமாகவே யிருப்ப தால், வெண்கதிர், வெண்சுடர் எனப்படுவதொடு, வெண் டிங்கள், வெண்ணிலா, வெண்மதியெனவும் அடைபெறும். இதனல், ஒண்மைக் கருத்தினின்று வெண்மைக் கருத்துத் தோன்றிற்று.

வெள்ளாடையும் வெண்சுவரும் வெறுமையாகத் தோன்று வதால், வெண்மைக் கருத்தில் வெறுமைக் கருத்துப் பிறந்தது.

சினக் கருத்து வெம்மைக் கருத்தினின்றும், தூய்மைக் கருத்தும் அறிவின்மைக் கருத்தும் வெண்மைக் கருத்தி னின்றும், வறுமைக் கருத்து வெறுமைக் கருத்தினின்றும், தோன்றும் கிளைக் கருத்துக்களாகும்.

விள்[2] என்னும் வெம்மைக் கருத்து வேர்ச்சொல், முல் என்னும் மகரமுதல் வேர்ச்சொல்லினின்று திரிந்ததாகும்.

முல்—முன்—மின்—மின்னல்—மின்னலி.

முல்—முள்—முளி. முளிதல் = காய்தல், எரிதல், வேதல்.

முளி—மிளி—மிளிர். மிளிர்தல் = ஒளிர்தல், விளங்குதல்.

முள்—விள்.

விளை[2]—1. வெம்மைக் கருத்து

விள்—விளர்—வியர். வியர்த்தல் = 1. வெப்பத்தால் உடலின் மேற்புறத்தில் நீர்த்துளி தோன்றுதல். "முயங்க யான் வியர்த்தன னென்றனள்" (குறுந். 84). 2. பொருமையால் மனம் புழுங்குதல். "வியர்த்தல் ஐயம் மிகைநடுக் கெனூஅ" (தொல். மெய்ப். 12).

வியர் = வெப்பத்தால் தோன்றும் வியர்வைத் துளி. "குறு வியர் பொடித்த கோலவாண் முகத்தள்" (மணி. 18 : 40). 2. இளைப்பு. "பந்தெறிந்த வியர்விட....கூ....ஆடுபவே" (கலித். 40).

வியர்ப்பு = வியர்வை. "வெய்துண்ட வியர்ப்பல்லது" (புறநா. 387).

வியர்வு—வியர்வை. வியர்வைக் கட்டி = கோடையில் வியர்வையாலுண்டாகும் புண்கட்டி.

வியர்—வெயர். வெயர்த்தல் = வேர்வையுண்டாதல். "புனை நுதல் வெயர்க்க" (பாரத. பன்னிரண். 47.)

க. பெமர் (b), து. பெகரு (begaru).

வெயர் = வேர்வை நீர். வெயர்ப்பு = வேர்வை நீர். ',குறு வெயர்ப் பொழுக்கென" (கல்லா. 16 : 5).

வெயர்—வெயர்வு. வெயர்—வெயர்வை.

வெயர்—வேர். வேர்த்தல் = வேர்வை கொள்ளுதல். "வேர்த்து வெகுளார் விழுமியோர்" (நாலடி. 64).

க. பேமெர். (b).

வேர் = வேர்வை, "வேரொடு கனைந்து" (பொருந. 80).

வேர்—வேர்பு. (சங். அக.) வேர்—வேர்ப்பு.

வேர்—வேர்வு. தென்றல் வந்தெனையன் திருமுகத்தின் வேர் வகற்ற" (கூளப்ப. 99).

வேர்—வேர்வை.

வெள்—வெய்—வெய்ய = வெப்பமான. "வெய்ய கதிரோன் விளக்காக" (திவ். இயற். 1 : 1). 2. கொடிய.

வெய்—வெய்யன் = 1. தீத்தெய்வம். 2. கதிரவன். 3. கொடியவன். "வெய்யனை யுலகேழுட னலிந்தவன்" (திவ். பெரியதி. 5 : 3 : 3).

வெய்—வெய்யவன் = 1. தீத்தெய்வம். "வெய்யவன் படையை விட்டான்" (கம்பரா. அதிகாய. 203) 2. கதிரவன். "வெய்யவ னூருந் தேரின்" (பெருங். இலாவாண. 8 : 172). 3. கொடியவன்.

வெய்யோன்=1. தீத்தெய்வம். 2. கதிரவன். ''வெய்யோ ஞெளி'' (கம்பரா. கங்கை. 1) 3. கொடியவன். ''ஆர்த்தனர் வெய்யோர்'' (கந்தபு. முதனுட்போ. 49)

வெய்—வெய்யில்=வெயில். ''நிழல் வெய்யில் சிறுமை பெருமை'' (திவ். திருவாய். 6 : 3 : 10).

வெய்யில்—வெயில்=1. கதிரவனின் வெப்ப வொளி. ''என்பி லதனை வெயில் போலக் காயுமே'' (குறள். 77.). 2. கதிரவ ஞெளி.

''துகில்விரித் தன்ன வெயிலவி ருருப்பின்'' (நற். 43). 3. கதிரவன். ''வெயிலிள நிலவேபோல் விரிகதிரிடை'' (கம்பரா. வனம்புகு. 2). 4. ஒளி. ''மணியிழையின் வெயில்'' (கம்பரா. நாட். 42).

ம. வெயில், க. பிசில், (b)

வெய்யது—வெய்து=பெ. 1. வெப்பமானது. ''சிறுநெறி வெய்திடை யுருஅ தெய்தி'' (அகநா. 203). 2. வெப்பம். (மதுரை. 403, உரை). 3. வெப்பமுள்ள பொருளா லிடும் ஒற்றடம். 4. துயரம். ''வெய்துறு பெரும்பயம்'' (ஞானு. 35 : 3). கு. வி. எ. 1. வெப்பமாக. வெய்துயிர்த்தல்= வெப்பமாக மூச்சு விடுதல். ''வெய்துயிர்த்துப் பிறைநுதல் வியர்ப்ப'' (அகநா. 207).

வெய்து—வேது.

வெய்து பிடித்தல்—வேது பிடித்தல்=1. ஒற்றடங் கொடுத் தல். ஆவிபுகை முதலியவற்ருல் உடம்பை வெம்மை செய்தல். 3. நீராவியால் உடம்பை வேர்க்கச்செய்தல். (வேது குளித்தல்) வேது—வேதை=துன்பம். ''ஏதையா விந்த வேதை'' (இராமநா. கிஷ். 14).

வெள்—வெய்—வெய்ம்மை—வெம்மை.

வெம்மை=1. வெப்பம். ''அழலன்ன வெம்மையால்'' (கலித். 11). 2. கடுமை. 3. வல்லமை. ''உலக மூன்று மென் வெம்மையி னுண்டது'' (கம்பரா. அதிகா. 4).

ம. வெம்ம, தெ. உம்ம.

வெம்=1. வெப்பமான. வெம்பகல். 2. கடுமையான. வெஞ்சொல்.

வெம்—வெம்பு. வெம்புதல்=1. மிகச் சூடாதல். ''மலை வெம்ப'' (கலித். 13). 2. வாடுதல். ''வேரோடு மரம்வெம்ப'' (கலித். 10 : 4). 3. வெப்பத்தாற் பிஞ்சிற் பழுத்தல். 4. கடுமையாதல். ''வெம்பின செருவின் வந்து'' (கம்பரா. நிகும்.

96). 5. மனம் புழுங்குதல். ''வெம்பினாரக்க ரெல்லாம்'' (தேவா. 776 : 2).

வெம்பு—வெம்பல் = 1. மிகு வெப்பம். ''வெயில் வீற்றிருந்த வெம்பலை யருஞ்சுரம்'' (நற். 84). 2. வாடல். 3. வாடினது. 4. வெப்பத்தாற் பிஞ்சிற் பழுத்த காய்.

வெம்பு—வெப்பு. = 1. சூடு. 2. காய்ச்சல் நோய். ''மேய வெப்பிடர் மீனவன் மேலொழிந்ததுவும்'' (பெரியபு. திருஞான. 1050). 3. காய்ச்சல் தெய்வம் (சுரதேவதை). ''மோடியும் வெப்பும் முதுகிட்டு'' (திவ். இராமானுசநூற். 22). 4. காய்ச்சல் நாண் மீன் (சுர நட்சத்திரம்). ''குருநின்ற நாட் கொன்ப தேழ் வெப்பென்பரே'' (விதான. குணகுண. 40). 5. துயரத்தாலுண்டாகும் உடல்வெப்பம். ''வெப்புடை மெய்யுடை வீரன்'' (கம்பரா. அயோமுகி. 62). 6. பொருமை, மனப்புழுக்கம். 7. துயரம். 8. கொடுமை. ''வெப்புடை யாடுஉச் செத்தனன் மன்யான்'' (பதிற்றுப். 86 : 4). 9. தொழுநோய். (சிலப். உரைபெறுகட்டுரை, 1, உரை).

ம, தெ. வெப்பு, து. பெப்பு (b).

வெப்பு—வெப்பம் = 1. சூடு. ''நீர்கொண்ட வெப்பம்போற் ருனே தணியுமே'' (நாலடி. 68). 2. காய்ச்சல் நோய். ''மீனவற் சுடு வெப்ப மொழித்து'' (திருவாலவா. 37 : 1). 3. பொருமை. 4. ஒரு நரகம். (சி. போ. பா. 2 : 3, பக். 20).

வெப்பு—வெப்பர் = 1. சூடு. ''அணிமுலைத் தடத்தி னெற்றி வெப்பராற் றட்பமாற்றி'' (சீவக. 1746). 2. சூடான வுணவு, ''புத்தகற் கொண்ட புலிக்கண் வெப்பர்.........உண்ட பின்னை'' (புறநா. 269 : 4). 3. காய்ச்சல் நோய். ஒ. நோ : *L.* febris, E. fever.

வெப்பு—வெப்பல் = 1. சாம்பல் நிறங்கலந்த செந்நிற முள்ளதும் கல்லின்றிக் கட்டிகட்டியாக வுள்ளதுமான நிலவகை (G. Tn. D. I, 286).

வெப்பு—வெப்பி. வெப்பித்தல் = சூடாக்குதல்.

வெள்—வெட்டை = வெப்பம். ''அனல் வெட்டையாற் சுருண்டு'' (இராமநா. உயுத். 14). 2. நிலக்கொதி. (W.)

தெ. வெட்ட, க. வெட்டெ.

வெட்டை—வெடை—வேடை = 1. வெப்பம். ''வேடையடைய்த வெதுப்பினும்'' (திருவாரு. 522). 2. மழையில்லா வறட்சிக் காலம். ''கொடிய வேடைப் படலாற் சோர்ந்து'' (இரகு. திருவவ. 29). 3. வேடைக்காலம்.

வேடைக்காலம் = 1. கோடைக்காலம். (W.) 2. வறட்சிக் காலம்.

வெள்—வெள்கை—வெட்கை—வெக்கை = 1. வெப்பம். "பூவில் வெக்கை தட்டும்" (ஈடு, 5 : 9 : 2). 2. புழுக்கம். 3. எரியும் நெருப்பினின்று வீசும் அனல். வெக்கை யடிக்கிறது. (உ. வ.) 4. கணைச்சூடு.

ம. வெக்க, க. பெங்கெ (benke).

வெம்—வெவ்—வெவ்விது = 1. சூடானது. 2. கொடியது. "சினமிக்கு வெவ்விதா யெழுந்து" (கலித். 102 : 20, உரை).

வெவ்—வெவ்வர் = வெம்மை. வெவ்வரோச்சம் பெருக (பதிற்றுப். 41 : 20).

வெவ்வுயிர்த்தல் = வெய்துயிர்த்தல்.

வெய்து—வேது—வெது.

வெது வெதுத்தல் = 1. இளஞ்சூடாயிருத்தல். 2. அரை குறையாக வேதல். 3. சிறிதுவாடுதல். (W.)

வெதுவெதுப்பு = இளஞ்சூடு.

வெது—வெதும்பு. வெதும்புதல் = 1. சுடவைத்த நீர் இளஞ்சூடாதல். 2. காய்ச்சல் தொடக்கத்தில் அல்லது நீக்கத்தில் உடம்பு சிறிது சுடுதல். 3. இலை மலர் முதலியன சிறிது வாடுதல். 4. வெம்மையாதல். "கொள்ள வோங்கும் வெண்குடை வெதும்புமாயின்" (சூளா. மந்திர. 26) 5. கொதித்தல். "விழிநீர்க ளூற்றென வெதும்பி யூற்ற" (தாயு. கருணாகர. 9). 6. மனம் நோதல். "வெதும்பி யுள்ளம்" (திருவாச. 5 : 1).

வெதும்பு—வெதுப்பு. வெதுப்புதல் = 1. மெல்லச் சுட வைத்தல். 2. நெருப்பில் வாட்டுதல். "தீயிலே வெதுப்பி யுயிரொடுந் தின்ன" (தாயு. சிவன்செயல். 5). 3. பழுக்கக் காய்ச்சுதல். "மீட்டும் வெதுப்பியதோர் செவ்வேல்" (தஞ்சை வா. 113).

வெதுப்பு—வெதுப்பம் = 1. இளஞ்சூடு. 2. வெப்பத்தாலுண்டாகும் வயிற்றுப் போக்கு. (W).

வெது—வெதுக்கு. வெதுக்குதல் = வெதுப்புதல்.

வெதுக்கு—வெதுக்கல்—வெதுக்கலன் = சூட்டால் இளைத்தவன்.

வெய்து—வெஞ்சு—வெச்சு = வெம்மை. வெச்செனல் = 1. வெம்மைக் குறிப்பு. "தண்ணென்று வெச்சென்று" (குமர. பிர. மீனாட். பிள்ளைத். 1). 2. கடுமை யாதற் குறிப்பு. "தம தீஞ்சொல் வெச்சென்றிடச் சொல்லி" (சீவக. 2015).

வெச்செனவு = சூடு. "தண்ணெனவும் வெச்செனவந் தந்து" (சேதுபு. கடவுள். 3).

வெச்சமுது = சமைத்த வுணவு. "வெச்சமுது மண்டபமும்" (T. A. S. i.: 100).

வெச்சுவெந்நீர் = சுடுநீர். (யாழ். அக.)

வெச்சு—வெசு—வெசவு—வெசவி = வெப்பக் காலம்.

தெ. வேஸவி, க.. பொசிகெ (besige).

வேது—வே. வேதல் = 1. எரிதல். "புனத்து வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே" (நாலடி. 186). 2. வெப்பமாதல். கடுங்கோடைக் காலத்தில் இரவும் பகலும் வேகும். 3. அழலுதல். 4. கொதிக்கின்ற நீரில் அல்லது எண்ணெயில் உணவுப் பொருள் பதமாதல். சோறு இன்னும் வேகவில்லை. 5. பொன் புடமிடப்படுதல். "வெந்தெரி பசும்பொன்" (சீவக. 585). 6. உடம்பு அல்லது உறுப்பு சுடப்படுதல். "வெந்த புண்ணில் வேலை நுழைத்தால் போல" (பழ.)

வேபாக்கு = வேகுகை. "வேபாக் கறிந்து" (குறள். 1128)

வெந்தல் = கருகியது, மிகையாக வெந்தது.

வெந்தித்தல் = சூடாதல். வெந்திப்பு = கொதிப்பு. வெந்தை = 1. வெந்தது. 2. நீராவியிற் புழுங்கியது. "புளிப்பெய் தட்ட வேளை வெந்தை வல்சியாக" (புறநா. 246). 3. பிட்டு (பிங்.). "வெந்தை தோசையே" (கந்தபு. தானப்ப. 8)

வெந்தயம் (வெந்த அயம்) = வெந்த இரும்பு, இருப்பு நீறு. "வெங்காயஞ் சுக்கானல் வெந்தயத்தா லாவதென்ன" (காளமுகில்).

வெந்த ஆணம்—வெந்தாணம்—வெஞ்சாணம்—வெஞ்சணம் = சமைத்த கூட்டு.

வெஞ்சணம்—வெஞ்சனம் = 1. சமைத்த கறியுணவு. 2. கறிக்குதவும் பண்டம்.

வெஞ்சனம்—வெஞ்சினம். "வெஞ்சினத்திற் பற்பட்டான் மீளாது" (காளமுகில்).

வே—வேக்காடு = 1. எரிகை. செங்கலுக்கு வேக்காடு பற்ருது. 2. கொதிக்கும் நீரில் அல்லது எண்ணெயில் வேகுகை. 3. அழற்சி. 4. வெந்தபுண். (W.) 5. வெப்பம். இன்றைக்குக் காற்றில்லாமல் வேக்காடாயிருக்கிறது. 6. பொருமை. அவர் வருந்திப் படித்துத்தேறிப் பரிசு பெற்ருல் உனக்கேன் இந்த வேக்காடு?

வே—வேக்காளம் = 1. வேக்காடு. 2. மனத்துயர். (யாழ் அக.)

வெக்காளம்—வெக்காளம் = 1. புழுக்கம். 2. துயரம். (யாழ். அக.)

வெக்காளம்—வெக்காளி. வெக்காளித்தல் = துயரப்படுதல். (யாழ். அக.)

வெக்காளிப்பு = வெக்காளம்.

வெக்காளி—வெக்களி. வெக்களித்தல் = மனம் புழுங்குதல் துயர்தல்.

வே—வேம்பு = வெப்பமான காலத்தில் தழைக்கும் அல்லது பழத்தினுலும் எண்ணெயாலும் சூடுண்டாக்கும் மரம். ''மனைக்கு வேம்பு, மன்றுக்குப் புளி''. (பழ.) 2. வேப்பங்காயிலை பூ பட்டை முதலியவற்றின் கசப்பு, கசப்பு ''வேம்புங் கடுவும் போல வெஞ்சொல்'' (தொல். செய். 111). 3. வெறுப்பு. ''வேம்புற்ற முந்நீர் விழுங்க'' (சீவக. 513).

ம. வேம்பு, தெ. வேமு, க., து. பேவு (b).

வேம்பு—வேம்பன் = வேப்பமாலை யணிந்த பாண்டியன். ''சினையலர் வேம்பன் றேராளுகி'' (சிலப். 16 : 149).

வேம்பா = வெந்நீர் சுடவைக்குங் கலம்.

வேங்கடம் (வேம்கடம்) = வேனிலில் வேகுங் காடாகிய பாலை நிலமலை.

வே—வேகு. வேகுதல் = 1. எரிதல். 2. புழுங்குதல். 3. உணவுப் பொருள் கொதிக்கின்ற நீரில் அல்லது எண்ணெயிற் பதமாதல்.

வேகு—வேகம் = 1. கடுமை. 2. காரம். மருந்து மிக வேகமாயிருக்கிறது. 3. வலிமை. 4. விரைவு. நீராவித் தொடர் வண்டியினும் மின்ளெடர் வண்டி வேகமாய்ச் செல்லும். 5. விசை. குற்ருலம் அருவி வேகமாய் விழுகிறது.

வேகுவேகெனல் = விரைவுக்குறிப்பு. வேகுவேகென்று ஓடி வருகிருன்.

தீ வேகமுள்ள தாதலால், வேதற்கருத்தில் விரைவுக் கருத்துத் தோன்றிற்று.

ஒ. நோ : வெய்து = வெப்பமாக, விரைவாக.

வெய்துயிர்த்தல் = வெப்பமாக மூச்சுவிடுதல்.

வெய்துகெடுதல் = விரைந்து கெடுதல். (குறள். 569.)

(தொடரும்)

சங்க இலக்கியத்தில் மணிகள்

[திரு. பி. எல். சாமி, பி.எசி.]

(பரல் அ-பக்கம் ௪0௬ இன் தொடர்ச்சி)

முத்தை இட்டுக் கிலிகிலி யென்று ஒலிக்கும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தது என்பதை இது சார்பாகக் கவனிக்க வேண்டும்.

"நோன்பகட் டுமணர் ஒழுகையொடு வந்த
மகாஅர் அன்ன மந்தி மடவோர்
நகாஅர் அன்ன நளிநீர் முத்தம் ....
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கி
....
....
கிளர்பூட் புதல்வரொடு கிலிகிலி யாடுந்
தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்."

—சிறுபாணாற்றுப்படை 55

குரங்குகள் கிளிஞ்சிலில் முத்தை வைத்துக் கிலுகிலுப்பை போல உமட்டியரின் குழந்தைகளுக்கு ஆட்டிக் காட்டும் என்று கூறி யுள்ளதைக் காணலாம். அந்த அளவு கொற்கையில் அக் காலத்தில் முத்துகள் மலிந்திருந்தன. தமிழ்நாட்டு முத்தை உரோம அரசிகள் தலையிலும் கழுத்திலும் காதிலும் கை விரலிலும் அணிந்திருந்ததாக எழுதியுள்ளனர். நீரோ என்ற உரோமப் பேரரசன் படுக்கையிலும் செருப்பிலும் பந்தலிலும் தனது தாடியிலும் தமிழ்நாட்டு முத்தை அணிந்து மகிழ்ந்தான் என்று பிளினி கூறியுள்ளார். தான் அருந்தும் மதுவிலும் முத்தைக் கரைத்துக் குடித்தானும். உரோம அரசிகள் மூன்று வடமாக முத்துகளைக் கழுத்தில் அணிவது வழக்கமாக இருந்தது. காதிலும் கைவிரலிலும் அசைக்கும்போது ஒலிக்கும் படி அணிகலன்களில் பயன்படுத்தினராம். மூன்று வட முத்து மாலைகளைத் தமிழகத்திலிருந்து வாங்கினதாகவும் கூறியுள்ளார். அகநானூற்றுத் தொகுதிக்கு நித்திலக்கோவை என்று பெயர் வழங்கியிருப்பதை இது சார்பாக எண்ணிப் பார்க்க வேண்டும். நூல் அறு முத்தைப்பற்றிக் குறுந்தொகை (104) கூறியுள்ளது. "தண்கடற் பிறந்த முத்தின் ஆரமும்" என்று அகநானூறு (13) கூறியுள்ளது. முத்து அணி ஆரத்தைப்பற்றிக் கலித் தொகை (99) கூறியுள்ளது. மாதவி தனது இடையில் பெரிய முத்துகளால் கோத்த முப்பத்திரண்டு வடத்தையுடைய

விரிசிகை யென்கிற மேகலையை அணிந்திருந்தாள் என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார். கழுத்தில் ஒரு காழ் முத்தம் (ஒற்றைவடம்) அணிந்திருந்ததையும் கூறியுள்ளார். ஆதலின் சங்க காலத்தில் முத்து மாலை தமிழகத்தில் மிகுந்திருந்தது. முத்தில் துளைபோடும் தொழிலாளர் இருந்தனர். தோளா முத்தைப்பற்றியும் (அகம் 137) துளைமுத்தைப்பற்றியும் (அகம் 225) கூறியுள்ளதைக் காணலாம். முத்தைச் சிலம்பில் பரலாக வைத்து அந்தச் சிலம்பொலியில் சங்க காலத்து மகளிர் மகிழ்ந் தனர் என்பதும் தெரிகின்றது. ஆனால், இத்தகைய சிலம்பை உரோம அரசிகள் பயன்படுத்தவில்லை.

> "....................தெண்ணீர்
> முத்தரிப் பொன்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று."
>
> —நற்றிணை 110

இதிலிருந்து சங்க காலத்திலேயே முத்தைப் பரல் கற்களாகச் சிலம்பில் வைத்துச் சிலம்பொலி கேட்டு மகிழ்ந்தார் என்று தெரிகிறது.

"புனைவினை ஆய்சிலம்பு எழுந்தார்ப்ப" என்று கலித் தொகை (59) கூறுவதையும் கவனிக்க வேண்டும். கண்ணகி பாண்டிய அரசன் நெடுஞ்செழியன் முன்னர் வழக்குரைத்த போது, 'யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே' என்று பாண் டியன் கூறினன். சோழர்களுக்கும் அக்காலத்தில் இலங்கைக் கரையிலிருந்து முத்துகள் வந்தன என்பது வரலாற்று ஆசிரி யர்கள் செய்திகளிலிருந்து தெளிவாகின்றது. உரோமர் முத்து களை இந்தியரைப் பின்பற்றி விலை மதிப்பு போட்டனர் என்றும் பிளினி எழுதியுள்ளார். வைரத்துக்கு அடுத்ததாக சிறந்த மணி யாக முத்தையே மதித்தனர். கிளியோபாட்ரா என்ற அழகியான அரசிகூட சிறந்த முத்துகளை வைத்துக்கொண்டிருந்தாளாம். முத்து சிறியதாயினும் மணிகளின் அரசி என்று உரோமர்கள் கருதினர். உரோமர்கள் முத்தை எந்த அளவு போற்றின ரென்றால் தங்களுடைய குழந்தைகளுக்கும் அன்புடன் வளர்த்த நாய்களுக்கும் முத்து என்ற பெயரை (Margarita) இட்டு அழைத்தார்கள். இந்தப் பெயரிடும் பழக்கம் தமிழருடைய பழக்கத்தை உரோமர் பின்பற்றியதால் வந்திருக்கலாம் என்று தோன்றுகின்றது. முத்து, முத்தன், முத்தையன் என்ற பெயர்கள் மிகப்பரவலாகத் தமிழ் நாட்டில் வழங்குகிறது. சில குடும்பங்களில் தலைக் குழைந்தைக்கு முத்து என்று பெயரிடுவது வழக்கம்.

"நோயிலை இவட்கென நொதுமலர் பழிக்குங்கால்
சிறுமுத்த னைப்பேணிச் சிறுசோறு மடுத்துநீ" —கலி, 59

"...............குறுநிலக் கோமா, னந்த
முத்தனை யன்றிப் பின்னை யாரையே முதன்மை செய்தான்"
—வில்லிபுத்தூரார் பாரதம், சூதுபோர். 14

தலைக் குழந்தை, அதுவும் ஆண் குழந்தை, முத்துபோலச் சிறந்தவன் என்று கருதும் வழக்கம் கலித்தொகையைப் பாடின காலத்திலிருந்தே இருந்தது என்பது தெளிவாகின்றது. தலைக் குழந்தைக்கு முத்து, முத்தையன் என்ற பெயரிடும் வழக்கம் கொங்குநாட்டிலும் எங்கள் வீட்டிலும் அண்மைக் காலம் வரை இருந்த பழக்கமாகும். பிற்காலத்தில் வைரத்தையும் முத்தையுமே சிறந்த மணிகளாக உரோமரைப் போலவே கருதினதால் 'வைரமுத்து' என்ற பெயர்கள் தோன்றின. முத்தையன், முத்து, முத்தாத்தாள் என்ற பெயர்கள் முதற் குழந்தைக்குப் பழங்காலந்தொட்டு வழங்கி வந்திருக்கின்றன. ஆதலின் கலித்தொகையில் கூறப்பட்ட முத்தன் என்ற பெயர் வழக்கம் பண்டைப் பெயர் சூட்டு வழக்கம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். உரோமர்களும் தமிழ் நாட்டுடன் சங்க காலத்தில் இருந்த வணிகத் தொடர்பால் தங்கள் குழந்தைகளை முத்தின் பெயரால் அழைத்தனர் என்று கருதவேண்டி யுள்ளது. தமிழ் நாட்டில் முத்தையே முதல் மணியாகக் கருதினர். ஏனென்றால் முத்துதான் தமிழ் நாட்டில் விளைந்த சிறந்த மணியாகும். அதனால்தான் படப்பாடலும் 'முத்தான முத்தல்லவோ முதலில் வந்த முத்தல்லவோ' என்று வருகின்றது. கி. மு. ஆறும் நூற்றாண்டிலிருந்து இன்று வரை முத்துதான் தமிழ் நாட்டின் சிறந்த மணி என்பதை உணர வேண்டும்.

மதுரையில் உள்ள மீனாட்சியம்மனுடன் தொடர்புபடுத்தி முத்து மீனாட்சி என்ற பெயர் வழங்கிவருவது தெரிந்ததே. மெகஸ்தனீஸ் கி. மு. மூன்றும் நூற்றாண்டில் எழுதிய நூலில் பாண்டியனின் மகளுடன் (Pandaea) முத்தைத் தொடர்புபடுத்திக் கூறியது மிகவும் கவனிக்கத்தக்கது. பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடற் புராணத்தில் தடாதகைப் பிராட்டியார் செழியர்பிரான் திருமகளாய்க் கலை பயின்று முடிபுனைந்து செங்கோலோச்சித் தன்னரசளித்த பெண்ணரசியாகக் கூறி யிருப்பதைப் பார்க்க வேண்டும். கி. மு. முதல் நூற்றாண்டுக்கு முன் மெகஸ்தனீஸ் கூறிய செய்தி உண்மையே

என்பதை இடைக் காலத்து நூலாகிய திருவிளையாடற்புராணம் கூறுவதிலிருந்து தெரிகின்றது. புராணங்கள் சில உண்மை வரலாற்றுச் செய்திகளை வைத்துப் புராணச் செய்திகள் கூறின என்பது தெரிகின்றது. மெகஸ்தனீஸ் கூறிய செய்தியிலிருந்து, கி. மு. மூன்றும் நூற்றுண்டில் பாண்டிய அரசி சிறப்பாக ஆண்டிருக்கின்ருள். அவள் நாட்டில் முத்து விளைந்தது தெளிவாகின்றது. அந்தப் பாண்டிய அரசியையே பிற்காலத்தில் முத்து மீனுட்சி என்று அழைத்துத் தெய்வமாக்கினர் என்று தெரிகின்றது.

ஆதலின் இந்தப் பெயர் இன்றும் பெண்களுக்குச் சூட்டப் பெறுகின்றது. பிற்கால நாயக்க மன்னர்களும் மீனுட்சியம்மனிடமிருந்து அரசுப்பட்ட உரிமை பெற்றதாகக் கூறிக் கொண்டதும் கவனிக்கத்தக்கது. பெரிப்புளுசு எழுதிய ஒரு செய்தியிலிருந்து கிரேக்கர்கள் வலம்புரி முத்தையும் தமிழ் நாட்டிலிருந்து பெற்றிருப்பர் என்று தெரிகின்றது. சோழ நாட்டுக் கடற்கரையிலிருந்து உறையூர்க்குச் சென்ற ஒருவகை ஒற்றையோட்டுக் கிளிஞ்சில் (Univalve) முத்தைப்பற்றிப் பெரிப்புளுசு கூறியுள்ளார். இந்த முத்தும் கிளிஞ்சிலும் சிறந்த துணிகளை (Muslins) ஏற்றுமதி செய்த உறையூரில் கிடைத்ததாகக் கூறியிருப்பதையும் கவனிக்க வேண்டும். உறையூரை ‘அர்கரு’ (Argaru) என்று கிரேக்கர்கள் அழைத்தனர். உறையூரில் ஏற்றுமதியான மெல்லிய துணியை ‘Argareitede’ என்று அழைத்தனர். இந்தத் துணி சங்க நூல்களில் கூறப்படும் ‘துகில்’ என்ற மெல்லிய துணியாகலாம்.

கிரேக்கர் இந்த முத்தை ஒருவகைக் கிளிஞ்சிலின் பெயரால் (Molluse) அழைத்துள்ளனர். ஆனுல், இஃது இரட்டை ஓட்டையுடைய முத்துச் சிப்பியன்று. இந்த முத்து வலம்புரி முத்தாகவே இருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. சோழ நாட்டுக் கோவலன் கண்ணகியை ‘‘மாசறு பொன்னே வலம்புரி முத்தே’’ என்று அழைத்திருப்பதைக் காணலாம். ‘‘வலம்புரி முத்தைப் பிற முத்திலும் மிகச் சிறந்ததாகக் கருதினர். வலம்புரி முத்திற் குலம்பிரி பிறப்பும்’’ (ஆத்திரையன். பொது) என்ற பாட்டுவரியிலிருந்து வலம்புரி முத்தைக் குலத்திற் சிறந்த முத்து என்று கருதினரென்று தெரிகின்றது. மரபின் தூய்மை கூறுவார் வலம்புரி முத்தென்றுர் என்று உரையாசிரியர் கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். ஒற்றைக் கிளிஞ்சிலான சங்குகளிலும் அரிதாக முத்து தோன்றுவதுண்டு. ஆனுல், இந்த முத்து உண்மையான முத்தன்று. தரத்திலும் குணத்திலும் தாழ்ந்த வகையாகும். இருப்பினும் சமயச் சார்பான

காரணங்களாலும் பழங்குடி மக்களால் போற்றப்பட்டதாலும் வலம்புரிச் சங்கில் மிக அரிதாகப் பிறந்த முத்து மிகுந்த பெருமை யுடையதாகவும் சிறந்ததாகவும் கருதப்பட்டது. இந்த முத்து உண்மையாகவே அறிவியற்படி சிறந்த முத்தாகா விட்டாலும் செயற்கைக் காரணங்களால் சிறப்புடையதாகக் கருதப்பட்டது.

பாமாஸ் (Bahamas) என்ற தீவில் அண்மைக் காலத்தில் இத்தகைய சங்கு முத்து கிடைத்ததைப்பற்றி Hemingway என்ற சிறந்த நாவலாசிரியர் எழுதியுள்ளார். இந்த முத்து களை இங்கிலாந்து அரசி மேரி மிகவும் விரும்பினதாக எமிங்வே என்ற ஆசிரியர் Island in the Stream என்ற புதினத்தில் எழுதியிருக்கிறார். இந்த முத்துகள் இளஞ்சிவப்பாகவும் பளபளப்பாகவும் இருந்ததாக எழுதியிருக்கிறார். இந்த முத்து களைச் சங்கு முத்துகள் (Conch pearls) என்றழைப்பர். சங்கு களில் அரிதாகக் கிடைப்பது வலம்புரிச் சங்காகும். அந்த அரிய வலம்புரிச் சங்கில் கிடைத்த முத்து மிகமிக அரிதானதாகவும் தூய்மையானதாகவும் கருதப்பட்டது. இது சோழ நாட்டுக் கடற்கரையில் கிடைத்ததால்தான் உறையூரில் விற்கப்பட்ட தாகத் தெரிகின்றது. இதையும் கிரேக்கர் வாங்கி யிருக்கின் றனர். ஆதலின் சிலப்பதிகாரம் கூறும் ''வலம்புரி முத்து'' கற்பனைச் செய்தியன்று. கிரேக்கர்கள் சங்குகளையும் தமிழகத்தி லிருந்து வாங்கினர் என்று கிரேக்க ஆசிரியர்கள் எழுதி யுள்ளனர். சங்குகளை அறுத்து வளையல் செய்யும் தொழில் சங்க காலத்தில் இருந்ததைச் சங்க நூல்கள் கூறியுள்ளன.

சங்க நூல்களில் கொற்கையில் பிறந்த முத்தைப்பற்றியே பல செய்திகள் வருகின்றன. பதிற்றுப்பத்தில் மட்டுமே ''பந்தர் பயந்த பயங்கெழு முத்தம்'' என்ற செய்தி சொல்லப் பட்டுள்ளது. பந்தர் என்ற ஊரின் பெயரையோ அது பயந்த முத்தையோபற்றி வேறு எந்தச் சங்க நூல்களும் கூறவில்லை. ஆனால், அறிஞர் மு. இராகவையங்கார் அர்த்த சாத்திரத்தில் கௌடில்யர் கூறிய மூன்றுவகை முத்துக்களைப்பற்றி எழுதி யுள்ளார். 'தாம்ரபர்னிக, பாண்ட்யகவாடக, சூர்னேய'என்ற மூன்றுவகை முத்துகளைப் பற்றிக் கூறியுள்ளார். இந்த முத்துகளில் 'பாண்டிய கவாடக' முத்தை வால்மீகி முனிவரும் இராமாயணத்தில் ''முத்தாமணி விபூஷிதம் யுக்தம் கவாடம் பாண்ட்யாநாம்'' என்று குறிப்பிட்டுள்ளதையும் கூறியுள்ளார். ஆனால், பாண்டிய கவாடம் தாம்ரபர்னியம் ஆகிய முத்துகளைப் பற்றி அவர் எழுதிய விளக்கம் தெளிவாக இல்லை. பாண்டிய கவா டம் என்பது பாண்டியரது வாயிற்கதவெனக் கொண்டு இடைச் சங்க காலத்துப் பாண்டியரின் தலைநகராக இருந்த கபாடபுரம்

என்று கூறி அந்தத் துறைமுகப்பட்டினம் கடல் கோளால் அழிந்த பிறகு கொற்கையில் விளைந்த முத்தே, 'தாம்ரபர்ணிகம்' என்று விளக்கியுள்ளார். இதையே அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்களும் ஏற்றுக்கொண்டு தாம்ரபர்ணிகம் சங்க நூல்களில் கூறப்பட்ட கொற்கை முத்து என்று கொண்டுள்ளார். ஆனால், அது சரியான விளக்கம் என்று கருத முடியாது. அலைவாய் என்ற தமிழ்ப் பெயரையே பாண்டிய கவாடம் என்று வடமொழியில் மொழி பெயர்த்துள்ளனர். அலைவாய் என்பதே பாண்டியரின் தொன்மையான தலைநகர மாகும். அது கடல் கோளால் அழிந்தபோது உள்நாட்டில் இப்போதுள்ள மதுரையில் தலைநகரத்தை நிறுவியபோது அலைவாய் என்ற பழைய பெயரையே இட்டு வழங்கினர்.

ஆனால், பிற்காலத்தில் புராணங்கள் எழுந்தபோது ஆலவாய் என்று தவருகக் கொண்டு பாம்பு மண்டலித்து வாயில் பற்றிய ஊரைச் சுற்றிய நகரம் என்று விளக்கினர். இந்தப் புராணக்கருத்து பொருத்தமற்றது. அலைவாய் என்பதை ஆலவாய் என்று மாற்றிப் புராணக் கதை படைத்தனர். இன்றும் மீனவர்களிடையே கடற்கரையில் படகுகள் எளிதில் இறங்கக் கூடிய இடங்களை அலைவாய் என்று கூறும் வழக்கம் உள்ளது. ஆதலின் அலைவாய் என்ற பெயர் இன்றும் மீனவர் வழக்கில் உள்ளதாகும். அதுபோன்றே மீனவர்கள் தொண்டி என்ற வழக்கைக் கடற்கரை ஓரத்தில் ஆழமான, பள்ளமான இடத்தைக் குறிக்கப் பயன்படுத்துவதைக் கேட்டிருக்கின்றேன். பண்டைக் காலத்தில் அலைவாய், தொண்டி, புகார் என்ற துறைமுகத்தைக் குறித்த பொதுப் பெயர்கள் சிறப்பு வழக்காகச் சங்க காலத்தில் சில சிறப்பான துறைமுகங்களைக் குறிப்பிட்டன என்பதைக் கவனிக்க வேண்டும். பாண்டியரின் பண்டை அலைவாய் அழிந்த பிறகு திருமுருகாற்றுப்படை எழுதப்பட்ட காலத்து திருச்செந்தூர், 'நாமனூர் அலைவாய்' என்று அழைக்கப்பட்டதைக் கவனிக்க வேண்டும். அதுபோலவே சங்க காலத்தில் மேற்குக் கடற்கரையில் தொண்டி என்ற துறைமுகப்பட்டினமும் பிற்காலத்தில் கிழக்குக் கடற்கரையில் தொண்டி என்ற பட்டினமும் இருந்ததைக் கவனிக்க வேண்டும். பாண்டியகவாடம் என்றது பாண்டியரது வாயிற்கதவு என்று சிலர் கொண்டனர். ஆனால், அது பொருத்தமற்றது என்று கருதி கோவிந்தராசர் எழுதிய உரையான ''கபாடமென்ற பெயர் கொண்ட பாண்டிய நகரம்'' என்ற விளக்கத்தை மு. இராகவையங்கார் வற்புறுத்தினர்.

(தொடரும்)

கவிதையும் நுகர்தலும்

[டாக்டர். செ. சிங்காரவேலன், எம்.ஏ., பி.எச்.டி.,

தமிழ்த்துணைப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

கவிஞனின் அநுபவம் :

மனிதனின் ஆற்றல் வாய்ந்த பேச்சு வடிவத்தையே கவிதை என்பர்;[1] உணர்ச்சியும் ஒலிநயமும் கலந்த கற்பனையின் அழகிய வெளியீடே கவிதையாகத் தோன்றுகின்றது.[2] பேச்சில் இத்தகு ஆழமோ, அருமைப்பாடோ அதிகமாகத் தோன்றவில்லை; ஆழ்ந்து சிந்தித்தற்கேற்ற நுட்பமான கூறுகள் கவிதையிலேயே மலர்கின்றன. இதற்கு என்ன காரணம்? கவிஞன் தன்னுடைய அடிமனத்து உணர்ச்சிகளுக்கு—உணர்ச்சிகளின் மெய்ப்பாட்டிற்குப் புறவடிவம் தர முயலுகின்றான்; அவனுடைய அகத்தெழுச்சி (inspiration) கவிதைக்கு அடிப்புலமாக அமைந்து விடுகின்றது. சொற்கள் தாளமிட்டுக்கொண்டு வெளிப்படுகின்றன. அந்தச் சொற்களின் அமைப்பொழுங்கிலே ஒரு நயம் தோன்றுகின்றது. அதனையே ஒலிநயம் (rhythm) என்று உரைக்கின்றோம். அந்த ஒலிநயக் கூறுகள் சுவைஞனின் செவிகளின் வழியே புகுந்து சிந்தையிற் பாய்கின்றன. கவிஞன் பெற்ற நுகர்ச்சி—அநுபவம், அவன் அடைந்து நின்ற மெய்ப்பாடு கவிதை வழியாக மறுவடிவம் பெற்று விடுகின்றது.

ஒலிநயம் அமைதல் :

கவிதையிற் காணப்பெறும் ஒலிநயம் எது போன்றது? ஒரு தொழிலகத்தில் இயந்திரங்கள் வேலை செய்யும்போது ஓர் அமைப்பில் ஒழுங்காகச் செயற்படுமே, அது போன்றதா? அல்லது கடலில் அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கி வரும் போது உண்டாகும் அழகிய அமைப்புப் போன்றதா? ஆம்; பின்னதே இந்த ஒலிநயத்திற்கு ஒப்பாகக் கூறத்தக்கது.[3]

---

1. "Poetry is the most powerful form of speech, but the essence of it is, not speech, *but emotion*"—Harris. L. S., "The Nature of English poetry", (1933), p. 55.

2. 'Poetry, in a general sense, may be defined to be "*The expression of the imagination*"—shelley, "A Defence of poetry" (1911), p. 4.

3. This rhythm of poetry is not absolutely regular like a machine; but regular in the sense that Sea-Waves are regular"—Harris. L. S., "The Nature of English poetry"—(1933) p. 7.

இதற்குக் காரணம் யாது? இயந்திரங்கள் உண்டாக்கும் ஒலியில் நயம் இராது; ஏன்? மனித மூளையின் உந்துதலில் விளையும் கூட்டொலி அது. ஆனால், கடல் ஒலி அவ்வாறன்று. அஃது இயற்கையின் எழுச்சி; மாபெரும் ஆற்றலின் விளைவு; எண்ணத் தொலையாத ஆண்டுகளாக இயங்கி வரும் வியத்தகு இயக்கம். அதுவே அகத்தெழுச்சியால் வரும் ஒலிநயத்திற்கு முற்றும் ஒப்பாகும்.

அமைதியாகக் கற்றல் :

இத்தகு சீரிய இயல்புகள் வாய்ந்த கவிதையை நாம் எத்துணை முறை பயின்றாலும் சலிப்புத் தோன்றாது; மாறாகப் புதுப்புது நயங்கள் தோன்றிய வண்ணமே இருக்கும்; புதுப் புதுக் கற்பனைகள் தொடர்ந்தவாறே இருக்கும். இதன் அடிப் படைக் காரணம், அதனைக் கவிஞன் தூய உணர்வில் நின்று படைத்துத் தந்திருக்கும் பாங்கே என்று கூறுவது மிகை யாகாது. திருவள்ளுவர் கூறிய "நவில்தொறும் நூல்நயம் போலும்" என்ற உவமை இவ் வியத்தகு கவிதைத் திறத்தையே சுட்டுகிறது என்று கூறலாம். ஓர் ஆங்கிலத் திறனாய்வாளர் கூறிய வரிகள் இங்கு நினைவில் எழுகின்றன: "ஒரு நல்ல கவிதை என்பது இருபதாவது முறையாகப் படிக்கின்ற போதும் மிக்க சுவையை ஊட்டுவதாக இருத்தல் வேண்டும்; முதன் முறையாகப் படிக்கின்ற பொழுதைவிட, தடவைக்குத் தடவை அதில் ஒவ்வொரு புதுமையை நாம் கண்டிட முடியும்" என்று எழுதுகிறார் அவ்வறிஞர்.[4] ஒவ்வொரு முறையும் புதுப்புது நயம் ஊறுதற்கு நிலைக்களனாக இருப்பது சீரிய கவிதை என்ற இலக்கணம் மறக்க வியலாதது. இதனாலேயே உரை நடையை விரைந்து படிப்பது போலக் கவிதையை விரைந்து படித்து இன்புற்றுவிட முடியாது என்று கூறுகின்றோம்.

ஒன்றுபட்ட சிந்தை :

கவிதையை எவ்வாறு நுகர்வது? ஒருமுறைக்கு இருமுறை மனம் ஒன்றுபட்டுப் படித்தல் வேண்டும்; அதில் அமைந்த ஒலி நயத்தின் அமைப்போடு ஒன்றிக் கற்றல் வேண்டும். கவிதை யில் பயன்படாத உறுப்பு ஒன்றும் இல்லை. சொற்கள், அவற் றின் இணைப்பு, தொடரால் அமைக்கப்பட்ட வரி ஒழுங்கு,

---

4. "A good poem is more interesting at the twentieth reading then at the first; we can always find something new in it"—Boulton, M., "The Anatomy of poetry" (1953), p. 5.

அவற்றின் அமைப்பும் அழகும், இவற்றினூடே மலையருவி ஓடி வருவது போன்ற ஒலிநயம், அதன் தெளிந்த அமைப்பில் நிழலாடும் கவிஞனின் அடிப்படை அநுபவம் அனைத்தும் கவிதையில் விளங்குகின்றன. இதனாலேயே கவிதையை நுகர் தலுக்கு ஒன்றுபட்ட சிந்தனை வேண்டும் என்கின்றோம்.

முக்கூட்டு அமைப்பு :

சங்க இலக்கியப் பாட்டுகள் தமிழிலக்கியத்தில் இன்று கிடைத்துள்ள பழம்பாட்டுகளில் தலையானவை. பழந்தமிழ்க் கவிஞர்களின் உரிய அகத்தெழுச்சியே அங்குக் கருவூலங்களாக அமைந்திருக்கின்றது. ''விழுமிய பொருளை விளம்புவதே கவிதையின் தலையாய நோக்கமாக இருத்தல் வேண்டும்'' என்ற பழந்தமிழ் நெறி அங்குப் பேணப்பட்டிருத்தலைக் காண்கின்றோம்.[5] ஒலிநயம், கற்பனை, நுகர்தல் ஆகிய முப்பேரியல்புகள் இப் பாட்டு ஒவ்வொன் றிலும் ஆட்சி செலுத்துவது அறிந்தின்புறத்தக்கது. எளிய சொற்கள் அவற்றை அடுக்கி உணர்ச்சியை முடுக்கும் தனித் தன்மை இழையோடும் கற்பனை ஆகிய முக்கூட்டு அமைப்பாக அவை விளங்குவன; சில சான்றுகளால் இங்கு இதனைத் தெளி வாக்கலாம்.

கபிலரின் கவிதை :

ஒரு பெண்ணின் குரல்; தலைவன் பிரியப் போகின்றான் என்ற செய்தியைத் தன்னுடைய உயிர்த்தோழி உரைக்கக் கேட்ட அப் பெண் பேசுகின்றாள்.[6] 'என்னை வருத்தம் தொடா ரும்படி அவர் பிரியமாட்டார்' என்ற உறுதிமிக்க கூற்று அப் பெண்ணின் வாயிலாக உணர்த்தப்படுகின்றது. கபிலர் படைத் துள்ள இப் பாட்டை நற்றிணையின் முதலாவது பாட்டாக அமைத்திருக்கின்றது பழந்தமிழ் இலக்கிய உலகம். தலைவனின் நற்பண்புகள் ஒன்றன்பின் ஒன்றாக அவள் மனத்தே எழுகின் றன. அவனது தவறாத வாய்மை ஒழுக்கமே அவளது நெஞ்சில் முதலில் எழுகின்றது. நிலையான சொல்லை—வாய்மை உடை யவன் என்கின்றாள். அவனது இனிமை ஒருநாளைக்கொருநாள் வளர்ந்துகொண்டே வருகிறது என்பது அவள் அநுபவம். அஃது இரண்டாம் இடம் பெறுவதாக அமைகின்றது. ''இன்று

5. ''இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்''—தொல்காப் பியம் நூற்பா—

6. நற்றிணை—கபிலர்—பா. 1.

மட்டு மன்று; என்றும் என் தோள்களைப் பிரியும் பண்புக் குறை பாடில்லாதவர்'' என்ற துணிவு அப் பெண்ணின் அசையாத நம்பிக்கைக்குக் கட்டியங் கூறுவதாக உள்ளது; ஆம்; முதல் இரண்டு வரிகளிலேயே கவிதையின் அழகிய பகுதிகள் பளிங்குக் கற்களில் இழைத்த பாவை போன்று பளிச்சிடுகின்றன :

''நின்ற சொல்லர்! நீடுதோ றினியர்!
என்றும் என்றோள் பிரிபு அறி யலரே!''

குறிஞ்சிப் பகுதியிலே, சுனைகள் பார்க்க இனியவை; அக் குளிர்ந்த சுனை நீரிலே அழகு பொங்கும் தாமரைகள் பூத்திருக் கும்; அத் தாமரையின் பூம்பொகுட்டிலே தேனீக்கள் மொய்க் கின்றன. தேனை உண்டு எழுகின்றன. மலையிடத்து உயர்ந்து ஓங்கியிருக்கின்ற சந்தன மரங்களின் நறுமண மிக்க கிளைகளிற் சென்று கூடு கட்டுகின்றன; இனிய தேனை அங்குக் கூட்டிப் பாதுகாக்கின்றன. இத்தகைய உயர்ந்த நிலையே மேதக்கோர் நட்பிற்கு உவமை கூறத்தக்கது ஆதலின் தனக்கும் தலைவனுக் கும் இடையே உள்ள 'கனிந்த காதல்' அதனைப் போன்றது என்று தலைவி சுட்டுவதாக அடுத்த பகுதி விரிக்கின்றது. எவ் வளவு உயர்ந்த கற்பனை யழகு இங்கு மாட்சி பெற்று விளங்கு கின்றது!

''தாமரைத் தண்தாது ஊதி, மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை!''

தலைவன் உள்ளம் தாமரையின் தாது (பூம்பொடி) என்றால், தலைவியின் உள்ளம் சந்தன மரத்தின் தாது! இருவருடைய நெஞ்சக் கருத்தும் ஒன்றுபட்டவிடத்துச் சந்தன மரத்திலே தேன்கூடு கட்டினாற் போலத் தலைவியினிடத்திலே அன்பு வைத்தான் தலைவன் என்று எண்ணி இன்புறும்படி அவ்வுவமை யைத் தலைவி வாயிலாகக் கூறி மகிழ்வூட்டுகின்றான் கவிஞன். ''உலகத்திற்குத் தண்ணீர் உயிர்; நீரை இன்றி அமையாது உலகம். அதுபோன்று அவரை யின்றி யான் இல்லை'' என்ற உறுதி மிக்க வார்த்தைகள் அடுத்து அவள் வாயினின்றும் உதிர் கின்றன. ''அவர் பிரிந்தால், அவர் கூடுதலாற் பெற்ற நறுமணம் மிகுந்த என் நெற்றியிற் பசலை ஊரும்; அதற்கு நிச்சயமாக அஞ்சுவார் அவர். ஆதலால் செய்வதறியாது தடுமாற்றம் அடைவாரோ? மாட்டார். ஆதலாற் பிரிதலைச் செய்யார்'' என்று முடிக்கின்றாள் அவள். இறுதியாகத் தன் வாழ்விற்கு உயிர் என்று தலைவனைச் சுட்டும் அழகும், அதற்கு அவள் காட்டும் உவமையும் கருத்தூன்றி உணர்தற் குரியன.

"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு"

என்ற திருவள்ளுவம் கபிலரது கவிதையில் எவ்வாறு பொன்னின் இடையிற் பதித்த செம்மணி போன்று ஒளி விளக்கம் காட்டுகிறது என்பது எண்ணுந்தோறும் இனிக்கின்றது:[7]

"நீரின் றமையா உலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்புஅறி யலரே."

பாட்டு முடிந்து விடுகின்றது. உயர்ந்த கருத்தொன்றை ஓர் ஆண்மகனின் உள்ளத்திற்கிசைந்த உயர்பண்புகள் வாய்ந்த துணைவி ஒருத்தியின் தூய நெஞ்சத்தின் அழியாத நம்பிக்கை ஓவியமாய்ப் பாட்டுக் கற்போர் மனத்திற் களிநடம் புரிகின்றது. தெளிவான சொற்கள், தனித் தனியே நின்று தெளிவான உண்மைகளை எடுத்துணர்த்தப் பாட்டின் ஒலி அமைப்புத் துணை செய்கின்றது. முதல் இரண்டு வரிகள் உள்ளத்தின் பிறழாத் தன்மைக்குப் பெருஞ்சான்று பேசுகின்றன. இப் பாட்டைக் களவுவழிப் பிரிவு, கற்புவழிப் பிரிவு— ஆகிய இரு நிலைகளினும் நிகழ்ந்த கூற்றாகக் கொள்ள இடம் உள்ளது; ஆனால், நச்சினார்க்கினியர் கற்பின்வழிப் பிரிவுணர்ந்து தலைவி கூறியதாகக் கொள்கின்றார்.[8]

தாமரை, சந்தனம் ஆகிய இரண்டின் இணைப்பு இங்குப் புலவன் படைத்த கற்பனை. தேனீக்கு உயர்ந்த பொருள்களை ஒன்றுபடுத்தும் சிந்தனை யறிவு இல்லை. கவிஞனுக்கு அவ்வாறு படைக்கத் தோன்றுகின்றது. 'புரையோர் கேண்மையை' விளக்கப் புகுவோனுக்கு இத்தகைய விழுமிய கற்பனை பெருந்துணை புரிந்துள்ளமை தெளிவு. கற்போனுக்கு ஒரு தூய உணர்வை இக் கற்பனை எழுப்புதல் கண்கூடு.

"அவனின்றி நான் இல்லை" என்ற உறுதிப்பாட்டை வள்ளுவன் கருத்தை உணர்த்தி எவ்வளவு தெளிவாகத் தலைவி உணர்த்திவிட்டாள்! எல்லோரானும் தெளிவாக உணரப்பட்ட உண்மையை உவமையாக இணைத்தது பெருஞ் சிறப்பு வாய்ந்தது. இவ்வாறு இக் கவிதை, அழியாத நல்லியல்பு பெற்றுக் கபிலர் என்ற கவிஞர் பெருந்தகையின் கை வண்ணமும் கருத்து வண்ணமும் குழைந்த தெய்வ ஓவியமாய்த் திகழ்கின்றது.

---

7. திருக்குறள்—வான்சிறப்பு—20 ஆம் குறள்.

8. தொல்காப்பியம் — பொருளதிகாரம் — நச்சினார்க்கினியம் — நூற்பா 147. உரை.

நக்கீரர் நற்கவிதை:

மற்றொரு கற்பனை. தலைவனுடைய பிரிவின் பிறகு வருந்துகின்ற ஒரு பெண்ணை அவளுடைய உயிர்த்தோழி கூறுவதாக அமைப்பு. தோழி கூறுகின்றாள்: [9]''தலைவர் நம்முடைய வருத்தத்தை அறிந்து இரங்கக் கூடிய நல்லியல்பு உடையவர். ஆதலால் விரைந்து வந்துவிடுவர்; நின் உடம்பிடத்துப் பரந்துள்ள பசலையும் விரைந்து நீங்கி விடும்''—மதுரைக் கணக்காயன் மகன் என்ற பெருஞ்சிறப்புப் படைத்த நக்கீரர் படைத்த இந் நற்கவிதை குறுந்தொகையுட் கோக்கப்பட்ட அன்புச் சித்திரம்.

பழிக்கு அஞ்சும் பண்பும், இரக்கம் வாய்ந்த கனிவும் உடையவன் தலைவன் என்பதைத் தோழி.

''அழிபு பெரிதுடையன்;
பழியும் அஞ்சும் பயமலை நாடன்''

என்ற சொற்களில் தெளிவுபடுத்துகின்றாள்; ''அழியல், ஆயிழை!'' (ஆய்ந்தணிந்த அணிகலங்களை உடையவளே! வருந்தாதே!) என்றே தொடங்குகின்றாள். தலைவியின் உடலிற் பரவியுள்ள பசலை என்னும் நிறவேறுபாடு (பிரிவால் பரவிய நிலை) விரைந்து நீங்கும் என்று கூறுகின்றாள்; தலைவன் வருகையே அதற்குக் காரணம் என்று கூறி மகிழ்வித்தாள். இவ்வாறு மகிழ்விக்கும் போதே கவிதையில் ஓர் உயர்ந்த உண்மையை உவமையாக்கிப் பாட்டில் 'அறத்தின் மணத்தை' மெல்லப் பரப்புகின்றான் கவிஞன். இனிப்புப் பூசப்பட்ட மருந்தின் வழியே வல்லமை சான்ற மருத்துவன் நோய் தீர்த்தல் போன்று, அகப்பொருட் கருத்துக்குள்ளே அறப்பொருட் கருத்தொன்று மெல்லக் குழைந்து சிந்தனைக்கு விருந்து படைக்கின்றது. எப்படி?

இவ்வுலகம் நிலையில்லாதது: ஆதலால் தாம் பெற்ற பொருட்செல்வத்தைப் பிறருக்கு ஈந்து புகழ்பெற விழைவான் ஒப்புரவு வல்ல வள்ளல் ஒருவன். ஆதலால் தன்னை இரப்போர்க்குத் தன்பொருள் அனைத்தையும் முற்ற வழங்கிவிடும் வள்ளன்மை உடையோன் அவன். அப் பொருள் அவனை விட்டு முற்றும் நீங்கிவிடும். அதுபோல் தலைவன் வருகையால் தலைவியின் பசலையும் முற்றும் நீங்கிவிடும் என்று முடிக்கின்றாள் அறிவுசான்ற தோழி. ''ஒன்று உலகத்து உயர்ந்த புகழ் அல்லாற்

9. குறுந்தொகை—மதுரைக்கணக்காயன் மகன் நக்கீரன்—143 ஆம் பா.

பொன்றுது நிற்பது ஒன்று இல்" என்பது திருவள்ளுவம். [10] "ஈதல் இசைபட வாழ்தல்; அது வல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என்றும் நெறிகாட்டும் வள்ளுவம். [11] ஆதலால் 'நல்லிசை' (நல்ல புகழ்) விரும்பிய நயன் உடைய நெஞ்சம் (நயன்—அன்பு) ஒப்புரவு செய்யும் உயர்பேராளனுக்கு இயல்பாக அமைந்து விடுகின்றது. 'கடப்பாட்டாளன்' என்ற சொற்றொடரமைப்புக் கருதத்தக்கது. 'செய்யத்தக்க கடப்பாடு என்ன என்று உணர்ந்து அதனை ஆளுகின்றவன்' என்ற பொருள் அமைப்புடைய இதனை 'ஒப்புரவை'க் குறிக்க வழங்கிய நக்கீரர் திறம் உணர்ந்து இன்புறற் குரியது. 'உலகத்தில் உள்ள பொருள்கள் அனைத்தும் நிலை யற்றவை; புகழ் ஒன்றே நிலைத்தது' என்பது பிறர்க்கு உதவும் பெருந்தகைமைவாய்ந்த ஒப்புரவாளரது உயர் கோட்பாடு. அதனை உவமை வாயிலாக நுட்பமாக இணைத்த கவிஞனின் நுண்ணறிவு கூர்ந்து நோக்கத்தக்கது. கற்பனை யமைப்பும், தெளிந்த சொல்லமைப்பும் கூடிய இக் கவிதையின் அடி நிலை யில் இத்தகு பேருண்மை ஒன்றைப் பின்னணியாக்கிய வெற்றியை நோக்குதல் வேண்டும்.

தலைவி பிரிவால் வருந்துவதைப் போன்றே, தலைவனுக்கும் பிரிவுத்துன்பம் உண்டு என்பதை, "அழிபு பெரிது உடையன்" என்ற சொற்களால் தோழி சுட்டிவிடுகின்றாள்; ஒரு பெண்ணை வருந்தச் செய்வது ஓர் ஆண்மகனுக்குப் பழி ஆதலின் அந்தப் பழிக்கு அஞ்சி அவ்வாறு செய்யார் என்பாளாகப், "பழியும் அஞ்சும்" என்று குறிப்பிட்டுவிடுகின்றாள்; பயனை உடைய மலை நாட்டுத் தலைவன் என்று கூறுவாளாக, 'உனக்கும் நற்பயன் விளைய நன்றே புரிவான்' என்ற கருத்து அடி நிலையாக மலரப் "பயமலை நாடன்" என்றும் கூறிவிடுகின்றாள். தலைவியின் உடலழகைத் தோழி "அழகு ஒழுகும் மேனி" ("அம் கலுழ் மேனி") என்று குறிப்பது இனியது. இவ்வாறு பாட்டின் தொடக்க முதல் அழகும் நுண்ணறிவுக் கிளர்ச்சியும் ஒன்றன்பின் ஒன்று பின்னித் தொடர எழுந்த இக் கவிதையைக் காலவெள்ளம் அழியாமற் காப்பாற்றியுள்ளது வியப்பு அன்று; இதன் பல் வேறு நல்லியல்புகளே காரணம் ஆவன :

"அழியல் ஆயிழை! அழிபு பெரிதுடையன்;
பழியும் அஞ்சும் பயமலை நாடன்!
நில்லா மையே நிலையிற் றாதலின்
நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சிற்

---

10. திருக்குறள்—புகழ்—233 ஆம் குறள்.
11. திருக்குறள்—புகழ்—231 ஆம் குறள்.

கடப்பாட் டாள னுடைப்பொருள் போலத்
தங்குதற் குரிய தன்றுநின்
அங்கலுழ் மேனிப் பாய பசப்பே.''

மாசாத்தியார் படைப்பு :

தலைவன் மீண்டு வருவேன் என்று கூறிச் சென்ற கார் காலம் வந்துவிட்டது. ஆனால், கூறியபடி தன் காதலன் வர வில்லை. அந்தப் பெண் வருந்துகின்றாள்; 'காலம் வந்துவிட்டது; காதலர் வரவில்லை' என்று தோழியிடம் உரைக்கின்றாள்.[12] கூறிச்சென்ற பருவம் வந்தும் கூட, வாய்மொழி தவறாமல் காதலர் வராதிருந்தும் உயிருடன் இருக்கும் தன்னைப் பார்த்துக் கார்காலம் எள்ளிச் சிரிக்கின்றது என்று எண்ணுகின்றது அந்தப் பெண்ணின் உள்ளம். எங்கும் முல்லையரும்புகள் வரிசை வரிசையாகத் தோன்றியுள்ள காலம் அது. அவை கார்காலம் என்ற பெண்ணிற்கு அமைந்த பல் வரிசைகளாகத் தோன்று கின்றன. கார்காலத்தின் முல்லைப் பற்கள் சிரிக்கின்றன என்று கருதும்படி இயற்கையோடு ஒன்றுபட்டுக் கசிகின்றது அந்தப் பாவையின் நெஞ்சம்.

''இளமை அருமையானது; அஃது உள்ளபோதே இன்பம் துய்க்க வேண்டும் என்ற கருத்தின்றிப் பொருளைத் தேடிச் சென்றாரே தன் காதலர்!'' என்று தொடங்குகின்ற போதே அவள்தன் உணர்ச்சி யலைகளை நன்கு உணரமுடிகின்றது ;

''இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்''

தன்பால் திரும்பி வாராத தலைவன் பொருள் தேடச் சென்றபொழுது இப்பொழுது எங்கு உள்ளானோ என்று அடுத்து மனம் பேதுறுகின்றது; சொற்கள் ஏக்கப் பெருமூச்சு விட்டுக்கொண்டு புறப்படுகின்றன; வெடித்துச் சிதறுவன போன்ற சொல்லமைப்பு :

''இவணும் வாரார் ! எவணரோ?''

இயற்கைச் சூழ்நிலை அவளுடைய இருகண்களின் முன் விரி கின்றது. நன்கு பெய்த பெருமழை; பூங்கொடி முல்லைகளுக்கு மழை நன்கு பாதுகாவலாக அமைந்துவிட்டது. ஆதலால் தொகுதிப்பட்ட முகைகள் வரிசை வரிசையாகத் தோன்றி விட்டன. ''அவையே தன் பற்களாகக் கொண்டு நறுமணம் வீசுகின்ற—குளிர்ந்த—கார்காலம் (நறுந் தண் கார்) நம்மைப் பார்த்துச் சிரிக்கும்...என்று முடிக்கின்றாள் அவள் :

---

12. குறுந்தொகை—ஒக்கூர் மாசாத்தியார்—126 ஆம் பாடல்.

"பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே."

உள்ளத்தின் அலைமோதும் துன்ப உணர்ச்சிகளை எத்துணை எளிதாகக் கவிதைச் சொற்கள் காட்டிவிட்டன! இவ்வாறு ஒரு பெண்ணின் உள்ளத்தைப் படம் பிடித்துப் பாடியுள்ளவரும் ஒரு பெண்பாற் புலவரே; ஒக்கூர் மாசாத்தியார் என்ற குறுந்தொகைப் புலவர்; இவர் பாடிய இத் திருப்பாட்டு சங்க இலக்கியக் கவிதைகளுட் சிறப்பிடம் பெறத்தக்க கவினுடைக் கவிதைகளில் ஒன்று ஆகும்.


வாழ்க்கையின் அடிப்படையை விளக்கும் சிறுசொற்றொடர் பாட்டின் முகப்பாக உள்ளது. வாழ்ந்து பார்க்கவேண்டும் என்ற அநுபவ வேட்கையை அந்த இளைய உள்ளம் எத்துணை உறுதியாகக் கொண்டுள்ளது என்பதனை "இளமை பாரார்!" என்ற சொற்கள், இரட்டைச் சொற்கள், மிகத் தெளிவாக்கி விடுகின்றன. "எவணரோ?" என்ற ஒற்றைச் சொல், 'சென்றோர் முகப்பப் பொருளும் கிடவாது' ஆதலின், பொருள் தேடும் அரிய முயற்சியில் ஈடுபட்டு எவ்விடத்தில் உள்ளனரோ என்று வருந்தும் தீராத் துன்பத்தை வெளிப்படுத்தும் 'அவலப் பேழை'யாக உள்ளது. நகைப்புப் பலவகைப் படும்; அவற்றுள் எள்ளுதற் பொருளில் வந்த நகைப்பாகவே கார்காலத்து நகைப்பு அவட்குத் தோன்றுகின்றது. "நகுமே தோழி!" என்ற தொடர் அந்த இகழ்ச்சிக்கு ஆற்றாத உணர்வைச் சுட்டுகின்றது. குறுமுறுவலாகப் பற்களை உள்ளடக்கிச் சிரித்தாலும்கூடப் பொறுத்துக் கொள்ளலாம்; பலருக்கு அச் சிரிப்புப் புலன் ஆகாது; ஆனால், கார்காலத்தின் சிரிப்பு விளங்குகின்ற பற்கள் பின்னும் புலப்படச் சிரிக்கும் பெருஞ்சிரிப்பு—வாய்விட்டுச் சிரிக்கும் சிரிப்பு என்கின்றோமே அத்தகைய வெளிப்படைச் சிரிப்பு ஆயிற்றே என்ற நயக்குறிப்பை, "இலங்கு எயிறாக நகுமே" என்ற தொடர் வழிப் புலப்படுத்துகின்றது புலவர் நுண்ணறிவு. கவிதையின் ஒவ்வொரு சொல்லும், உணர்ச்சியைக் கற்பனை நயம் குழைத்து வெளிப்படுத்தும் திறம் வியத்தற் குரியதாக உள்ளது.

பல்வேறு பாடல்களில் விளக்கக் கூடிய உணர்ச்சியின் கூறுகளை ஓர் ஐந்துவரிப் பாட்டு எத்துணை அருமையாக விளக்கி விட்டது என்று எண்ணி எண்ணி மகிழுமாறு இச் சங்கக் கவிதை அமைந்துவிட்டது.

———

தமிழ்நாட்டின் புதிய ஆளுநர்

குசராத் மாநிலத்தைச் சேர்ந்த 68 அகவையுடைய திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தமிழ்நாட்டின் புதிய ஆளுநராக 27—4—77இல் பதிவியேற்ருர். இவர் காந்தியடிகளின் நெறியைப் பின்பற்றும் ஓர் உண்மையாளர். இவர் பதவியேற்றபோது நிகழ்த்திய உரையினின்று இவர் தம் அரிய பண்பு நலன்களை அறிந்துகொள்ளலாம். மதுக்குடி ஒழித்தல், சூதாட்ட ஒழிப்பு, புலால் உண்ணுமை, புகைபிடித்தலை ஒழித்தல் இன்னபிற நற்பணிகள் ஆற்றுவதில் இவர் மிகக் கண்ணுங் கருத்துமாயிருக்கிருர். அதற்குச் சில எடுத்துக்காட்டுகளை இங்கே தருகிரேம்.



எதிர்காலத்தில் ராஜபவனத்தில் நடைபெறும் விருந்துகளில் புலால் உணவுகள், சிகரெட்டு முதலியன வழங்கப்படமாட்டா எனவும், அவை வழங்கப்படுதல் காந்தீய நெறிகட்குப் புறம்பானவை எனவும் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டிலும் அதனைச் சுற்றியுள்ள மாநிலங்களிலும் மது ஒழிப்பு கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும் என்கிருர் அவர். மது அருந்துவோருக்கு அனுமதி வழங்குவதிலும் சில இன்றியமையாக் கட்டுப்பாடுகள் தேவை என்கிருர். மதுவிற்பனையால் அரசுக்கு வரும் வருவாய் ‘கறைபடிந்த வருவாய்’ என்கிருர் அவர். ஊழல்கள் பற்றிக் குறிப்பிடும்போது ‘ஊழல் என்பது எங்கும் காணப்படுவதொன்ருனுலும் முடிந்த வரையில் அதனை ஒழிக்க முயலவேண்டும் என்கிருர்.

ஆளுநர் கூறுகின்ற இப் பண்பாடுகள் முற்றிலும் தமிழகப் பண்பாட்டிற்கு உகந்தவை என்பதும், திருவள்ளுவர் வகுத்த செந்நெறிகள் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கவையாகும்.

ஆரவாரத்திற்கே உரிய ஆளுநர் பதவியில் இத் தகையதொரு எளிமையானவரும் பண்பாளரும் அமர்ந்திருப்பது பாராட்டத்தக்கதும் வரவேற்கத்தக்கதுமாகும். மாண்பமை ஆளுநர் அவர்கட்கு நம் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளுகிரேம்.

குறிப்பு : அரசு அலுவலகங்களில் காந்தியடிகள் திருவுநவப் படம் மட்டுமே இருத்தல் வேண்டும் என்ற கருத்தும் உருவாகி வருகின்றது.

செய்திகளும் குறிப்புகளும்

திருக்குறள் பீடம் குருகுலத் திருநாள்

10—4—77 அன்று மாம்பாக்கம் குருகுலம் திருக்குறள் பீடத்தலைவர் தவத்திரு அழகரடிகளின் பிறந்தநாள் விழா குருகுலத் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது. கவிஞர் சி. து. கன்னிசாமி அவர்கள் குருகுல ஏற்றுக் கொடியினை ஏற்றி வைத்தார். தவத்திரு அழகரடிகள் குருகுல அன்னையாருடன் பாலசுந்தர விநாயகர், ஆடற் பெருமான் ஆலயங்களில் வழிபாடு செய்து அன்பர்கட்கு அருளுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். திருவாளர்கள் ந. ரா. ஆடலரசு, கவிஞர் சி. து. கன்னிசாமி ஆகியோர் அடிகளாரைப் பாராட்டிப் பேசினர். பின்னர்த் திருக்குறள் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கட்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. புதூர் பெரு நிலக்கிழார் மோகன் பரிசுப் பொருள்களை நன்கொடையாக வழங்கினர். திரு. N. சுந்தரமூர்த்தியவர்கள் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

நல்லூர் நத்தத்தனர் விழா

திருக்குறள் பீடம் அழகரடிகளின் அருளாணைப்படி 13—4—77 இல், கடப்பாக்கம் ஊராட்சித் தலைவர், பெரு நிலக்கிழார் திரு. P, K. ஆதி கேசவலு ரெட்டியார் அவர்கள் தலைமையில் இடைக்கழி நாட்டு நல்லூர் நல்லிசைப் புலவர் நத்தத்தனர் விழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. புலவர் நடேச நாராயணன், புலவர் செ. வாசுகி ஆகியோர் உரையாற்றினர். குருகுல மாணவர்களால் கலை நிகழ்ச்சிகளும் நடை பெற்றன.

நால்வர் நூற்றுண்டு விழா

மறைமலையடிகளார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார், நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகிய புலவர் பெருமக்கள் நால்வரின் நூற்றுண்டு விழா, 17—4—77 இல் திருச்சி தேவர் மன்றத்தில், தமிழகப் புலவர் குழுவின் சார்பில் நடை பெற்றது. புலவர் குழுத் தலைவர் முதுபெரும் புலவர் மே. வீ. வேணு கோபாலப் பிள்ளை அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினர். பேராசிரியர் நயினர் முகம்மது அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்தார். டாக்டர் சி. சுப்பிரமணியம், பேராசிரியர்கள் ரம்போலா மாஸ்கரேனஸ், அ. மு. பரமசிவானந்தம், டாக்டர் வ. சுப. மாணிக்கம், ஆகியோர் உரையாற்றினர். நாவலர் அரசப்பனர் நன்றி நவின்றுர். திருமதி மணிமேகலை கண்ணன் தமிழ்ப் பண்பாட விழா மிகச் சிறப்புடன் இனிது நிறைவேறிற்று.

டாக்டர் மு. வ. பிறந்தநாள் விழா

26—4—77 இல், திருவல்லிக்கேணி, டாக்டர் மு. வ. தமிழ்ச் சங்கத்தின் சார்பில், சென்னைப் பல்கலைக்கழக இந்தித் துறைத் தலைவர் டாக்டர் சு. ரங்கராசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. டாக்டர் சி. பால சுப்பிரமணியம், க. த. திருநாவுக்கரசு ஆகியோர் உரையாற்றினர்.

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் மு. வ. படத்தினைத் திறந்து வைத்துச் சிறப்புரை யாற்றினர்.

அருள்மிகு. தண்டபாணி அடிகள் நினைவு விழா

2—5—77 இல் பழனி அடிவாரம் தண்டபாணி அடிகள் மடாலயத்தில் பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தலைமையில் புலவர் தி மு. சங்கரலிங்கம் வரவேற்புரையும் தவத்திரு. சுந்தர சுவாமிகள் சிறப்புரையும் ஆற்றினர். 'வானெலியில் வண்ணச் சரபர்' என்னும் நூலினைத் தவத்திரு முருகதாச அடிகள் வெளியிட்டார்.

தவத்திரு முருகதாச அடிகளின் 70-ம் ஆண்டு நிறைவு விழா

2—5—77 இல் கோவை சிரவணபுரம் கௌமார மடாலயத் தலைவர், தவத்திரு. சுந்தர சுவாமிகள் தலைமையில் அருள்மிகு தண்டபாணி அடிகளின் பெயரரும், தவத்திரு செந்திநயக அடிகளார் மகனும் மாணவருமான தவத்திரு. முருகதாச அடிகளின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா இனிது நடைபெற்றது. அறிஞர் பலர் பாராட்டுரை வழங்கினர்.

உருசிய மொழியில் தமிழ் இலக்கியங்கள்

ஓல்கா லெமஷேவா என்னும் உருசியப் பெண்மணி மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் தமிழை நன்கு கற்றுத் தேர்ந்தவர். அவர் தமிழ் நாட்டிற்கு வந்து 1976 சூலைத் திங்கள் முதல் தமிழ் ஆராய்ச்சியில் இறங்கி முக்கூடற்பள்ளு, குற்றாலக் குறவஞ்சி ஆகிய இரு தமிழ் இலக்கிய நூல்களை உருசிய மொழியில் பெயர்த்துள்ளார். உலக இலக்கியங்களுள் தமிழ் இலக்கியம் வளமிக்கதாகும் என்கிறார் அவர்.

மறைமலையடிகள் நூற்றாண்டு விழா

சென்னைத் துறைமுகக் காப்பகத்தின் (Madras Port Trust) இலக்கிய மன்றத்தின் சார்பில் 29—4—77 அன்று மாலை மறைமலையடிகள் நூற்றாண்டு விழா நடைபெற்றது. மறைமலையடிகள் நூல் நிலைய நூலகர் திரு இரா. முத்துக் குமாரசாமி, சென்னை அரசாங்க ஓலைச்சுவடி நூல் நிலையத்தைச் சார்ந்த புலவர் திரு பூ. சுப்பிரமணியம், திரு. தண்டைசுலம்போதரன் திரு. வீரமணி ஆகியோர் பேசினர்.

சேவைச் செம்மல் புலவர் கந்தசாமி வாழ்க

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் சென்னை வகையாளரும் சேவைச் செம்மலுமான உடர் திரு புலவர் வி. எஸ். கந்தசாமி அவர்கள் 6—5—77 இல் சேலத்திற்கு மாற்றலாகி சென்றுள்ளார்கள். அவர்கட்குக் கழகத்தின் சார்பில் நமது உளமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சைவ சித்தாந்த மகா சமாசம்

1966 ஆம் ஆண்டில் மறைத்திரு மறைமலையடிகளாரால் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் திருமடத்தில் தொடங்கப் பெற்ற சமாசத்தின் 71 ஆம் ஆண்டு நிறைவு விழா திரு. க. கலியாணம் பிள்ளை (எம் ஏ.) அவர்கள் தலைமையில் 1977 மே 6, 7, 8 ஆம் நாள்களில் வேலூர்க் கருகிலுள்ள அருள்மிகு இரத்தினகிரியில் நடைபெற்றது.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(முன் சுகஉ ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழக ஆட்சியாளர் ஏப்ரல் நன்கொடை	ரூ. 100	00
செயற்குழு உறுப்பினர்		
திரு. சொ. சுப்பிரமணிய பிள்ளை பிறந்தநாள் நன்கொடை	25	00
திரு. இரா கல்யாணசுந்தரம்		
('ஒலியின் கதை' ஆசிரியர் கைம்மாற்றில் ஒரு பகுதி)	20	00
திரு. . க. இராசலட்சுமி, பிறந்தநாள் நன்கொடை	5	00
திரு. ஆ சுப்பையா பிள்ளை கழக மேலாளர்		
ஏப்ரல் நன்கொடை	5	00
திரு. பா. மாசிலாமணி புட்பம் கல்லூரி, பூண்டி		
(கும்பகோணம் கிளை)	10	00
திரு. வே. நடராசன், தமிழாசிரியர், ஏரகுடி (திருச்சிக் கிளை)	5	00

குறிப்பு: தமிழ் அறிஞர்கள், அன்பர்கள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை வழங்கிப் புகழ் பெறுவார்களாக.

மதிப்புரை

பன்னிரு திருமுறை வரலாறு (முதற் பகுதி)

[ஆசிரியர்: வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனார்; வெளியீடு: அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர் (அஞ்) தெ. ஆ. (மா. வ.) விலை: ரூ 5-00].

பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகளைப் பற்றிய விரிவான வரலாற்று ஆராய்ச்சி நூல். திருப்பனந்தாள் அறக்கட்டளை வெளியீடாகிய இந் நூல் இப்போது மறுபதிப்பாக வெளிவந்துள்ளது.

திருமந்திரமாலை முந்நூறு (உரையும்-விளக்கமும்)

[உரை-விளக்க ஆசிரியர்: சித்தாந்த புலவர் வித்துவான் திரு. ந. சிவப்பிரகாச தேசிகர். வெளியீடு: அண்ணாமலைப் பல்கலைக் கழகம். விலை: ரூ. 6-00].

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தை அருளிச் செய்த தவ ஆசிரியரான திருமூலர் இயற்றியருளிய மற்றொரு நூல் 'திருமந்திர மாலை முந்நூறு' ஆகும். 372 அரிய மந்திரப் பாக்களையுடைய இந் நூலுக்குச் சிறந்த குறிப்புரையும் விளக்கமும் வரையப் பெற்றுள்ளன. திருப்பனந்தாள் அறக்கட்டளை வெளியீடாகவுள்ளது.

வள்ளுவரும் கம்பரும்

[ஆசிரியர்: பெரும்புலவர். திரு. ச. தண்டபாணி தேசிகர், வெளியீடு: அண்ணாமலைப் பல்கலைக் கழகம். விலை: ரூ. 15-00].

பெருநாவலராகிய திருவள்ளுவர் பெருமானின் பொய்யா மொழியைக் கம்பர் ஆய்ந்து கற்றமையினையும் இடத்திற் கேற்பச் சொல்லையும் பொருளையும் சுவையையும் எடுத்தாண்டுள்ளமையும், கருத்தாட்சி முதலியவற்றையும் பன்னிரு தலைப்புகளில் விளக்குகின்றது இந்நூல்.

பாரதியின் பாப்பாப் பாட்டு

[வெளியீடு: தமிழ்நாடு மாநிலப் பனைவெல்லம், மற்றுப் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம், 52, கெங்குரெட்டி சாலை, எழுமூர், சென்னை-600008. விலை: 50 காசு].

திருக்குறள், சிலப்பதிகாரம் முதலியவற்றைப் பனையோலைப் பதிப்பாக வெளியிட்டு வரும் கூட்டுறவு இணையத்தினர் அண்மையில் 'பாரதியின் பாப்பாப் பாட்டு' ஏட்டுச் சுவடியை வெளியிட்டுள்ளனர். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இயற்றிய பாப்பாப் பாட்டு அடங்கிய இச் சுவடியின் ஓவ்வொரு பக்கத்திலும் சித்திரங்களும் அச்சிடப் பட்டுள்ளன.

குற்ற விசாரணை முறைச் சட்டம் (The Code of Criminal Procedure)

இந்தியச் சாட்சியச் சட்டம் (The Indian Evidence Act)

இந்தியத் தண்டனைச் சட்டம் (The Indian Penal Code)

—தமிழ்நாடு (சட்டத் துறை) ஆட்சிமொழி ஆணையம் சென்னை.

தமிழ் மொழி ஆட்சி மொழியாக - நீதிமன்ற மொழியாக ஏற்றுக் கொள்ளப் பெற வேண்டுமென்று தமிழ் மக்கள் விரும்பியதற்கிணங்க, தமிழ் ஆட்சி, நீதிமன்ற மொழியாக ஏற்கப்பெற்றுள்ளது. அதற்கு உதவும் வகையில் முன்னாள் நீதிபதி உயர்திரு. எஸ். மகராஜன் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள தமிழ்நாடு (சட்டத் துறை) ஆட்சி மொழி ஆணையம் நீதிமன்றம் நடைபெறுதற்கு மிக இன்றியமையாத மூன்று முதற்கண் சட்டங்களை மொழிபெயர்த்துத் தந்துள்ளது.

குற்றங்களுக்குரிய தண்டனைகளை வழங்குவது தண்டனைச் சட்டம். குற்றம் நடைபெற்றதை விசாரிக்க உதவுவது விசாரணை முறைச் சட்டம். குற்றம் தொடர்பாகச் சாட்சிகளைப் பதிவு செய்ய உதவுவது சாட்சியச் சட்டம்.

இம் மூன்று சட்டங்களையும் தமிழ்நாட்டு நீதி மன்றங்களில் பயன் படுத்துவதற்காகக் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் ஆணையம் வெளியிட்டுள்ளது. குற்ற வழக்கு மன்றங்களில் தீர்ப்பு தமிழில்தான் வழங்கப் பெற வேண்டுமென்று தமிழக அரசு செய்துள்ள முடிவு செயல் முறையில் நிறைவேற இந் நூல்கள் துணை புரியும்.

சட்ட நுணுக்கங்கள் நிறைந்த சொற்களைத் தமிழ் மரபு கெடாது எளிய இனிய தெளிவான நடையில் இம் மூன்று சட்டங்களும் தந்துள்ளன. பிறமொழி அறியாத ஏழை எளிய மக்களும் இனிச் சட்டம் என்ன கூறுகிறது என்பதை ஓரளவு தமிழ் படித்தவர்கள்வழி அறிந்து கொள்ள இந் நூல்கள் உதவும். இவற்றைக் காலத்தே கொணர்ந்த ஆணைய உறுப்பினர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

முழுமுதற் கடவுள் சிவபெருமான்

வெற்றிக் கடவுள் பிள்ளையார், கல்விக் கடவுள் கலைமகள், காப்புக் கடவுள் திருமால், தமிழ்க் கடவுள் முருகவேள், ஆடல் கடவுள் அம்மை அம்பலவாணர் எனப் பல்வேறு தலைப்புகளில் கடவுட்டன்மைகளை விளக்கும் கையேடுகள் முன்னர் வெளிவந்திருப்பதை அன்பர்கள் அறிவர். அவ்வகையில் இக் கையேடு அனைத்துக்கும் அப்பாற்பட்ட முழுமுதற் கடவுளாம் சிவபெருமானின் ஆற்றல்களை விளக்கும் முறையில் சிறந்த எடுத்துக் காட்டுகளுடன் வெளிவந்துள்ளது. 0 60

சண்முக கவசம் (ஆறுமுக கவசம்)

பகை கடிதல் பதிகத்துடன் குறிப்புரையும் பொழிப்பும் :

பாம்பன் அடிகள் அருளிய இந்நூல் முருகன் அருள் நாடி மக்கள் உய்ய வழிகாட்டும் ஒரு சிறந்த நூலாகும். அன்றுடம் ஓதி வழிபடுதற்கு ஏற்றது. இதற்குப் பொழிப்புரையும் குறிப்புரையும் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே, பொருள் தெரிந்து ஓதி அருள்பெற வழிகாட்டும் சிறந்த நூலாகத் திகழ்கிறது. முருகபக்தர்கள் இல்லங்கள் தோறும் இருக்க வேண்டியநூல் இதுவே. 1 00

திருக்குறள் காவடிச் சிந்து

— *புலவர் பொ. முனியப்பன்*

பல்வேறு வகையான பாடல்கள்வழி திருக்குறளைப் பரப்பும் வகையில் வெளிவந்துள்ள நூல்களுள் இக் காவடிச் சிந்தும் ஒன்றாகும். இனிய சந்தங்களால் ஆன இப் பாடல்கள் படித்துப் பொருள் அறியவும், கேட்டு இன்புறவும் ஏற்ற வகையில் அமைந்துள்ளது. 1 75

திருக்குறள் தாலாட்டு

ஆசிரியர் : மு. பொ. ஈசுரமூர்த்தியா பிள்ளை

தாய்மார் வளர்க்கும் தமிழாகிய தாலாட்டு, குழந்தைகட்குச் செவிக்கின்பமும் பெரியவர்கட்குக் கருத்துக்கு இன்பமும் நல்கும் ஆற்றல் வாய்ந்தது. அத்தகைய தாலாட்டின் வாயிலாகத் திருக்குறள் கருத்துகளைப் பரப்பும் நோக்கத்துடன் இத் திருக்குறள் தாலாட்டு வெளியிடப்பட்டுள்ளது. தாலாட்டின் மூலம் திருக்குறட் கருத்துகள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப்படுகின்றன. இல்லங்கள் தோறும் இருக்க வேண்டிய புத்தகம். ரூ. 0 80

திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா

(உரை நடையும் குறிப்பும்)

உரையாசிரியர் : புலவர் இரா. இளங்குமரன்

குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா முருக அன்பர்கள் ஓதி மகிழ்தற்குரிய அரிய வழிபாட்டுப் பாடல்களைக் கொண்டது. இதற்குச் சிறந்த உரைநடையும் குறிப்புரையும் சேர்க்கப்பட்டிருப்பதால் பொருள் தெரிந்து ஓதுதற்கு ஏற்ற அரிய நூலாகத் திகழ்கிறது. ரூ. 1 25

பதிவு எண் : M. 4899

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

பாண்டிய நாட்டுத் திருப்பதிகள்—ந. சுப்புரெட்டியார்	8	00
திறனாய்வுக் கட்டுரைகள்—ச. வே. சுப்பிரமணியம்	10	00
போதும் உங்கள் உதவி (1976 ஆம் ஆண்டின் சிறுகதைகள்)	4	50
கண்ணதாசன் கதைகள்—கண்ணதாசன்	6	00
திருவருட்பா தெய்வமணிமாலை சரணப்பத்து —மா. சு. காமாட்சிநாதன்	2	00
புது உலகம் கண்டேன்—நா. பார்த்தசாரதி	7	00
வில்லி பாரதம் (இலக்கியச் சொற்பொழிவு) —மு. ரா. கந்தசாமிக் கவிராயர்	6	00
இராமகாதை—(,,)	6	25
வாரியார் சுவாமிகள் கேள்வியும் பதிலும் III	2	00
சிவப்புக்கல் மூக்குத்தி—கண்ணதாசன்	1	50
பிரம்மரகசியம்—ரா. சு. நல்லபெருமாள்	10	00
கவிமணி கவிதை—மு. சண்முகம்பிள்ளை	6	00
நபிகள் நாயகம்—அப்துல் ரஹீம்	2	00
மக்கள் நாயக மரபுகள் —சாலை இளந்திரையன்	6	[illegible]
பாண்டிய பரதன்—ரேவதி	[illegible]	[illegible]
வாழ்வின் வெற்றிக்கு 1000 வழிகள்—ர. சண்முகம்	7	[illegible]
உலகமகா புருஷர்கள்—நஜன்	6	00
தேவி புவனேஸ்வரி—நஜன்	3	00
வந்தனா— சரத்சந்திரர்	11	00
நாயகன் நாயகி—கோவி. மணிசேகரன்	4	00
சந்திரோதயம் ,,	17	50
குமரகுருபரர்——பெரும்புலவர் அ, நடேச முதலியார்	2	40
பன்னிரு திருமுறை வரலாறு (முதல் 7 திருமுறைகள்) —வித்துவான் வெள்ளைவாரணன்	5	00
சிலப்பதிகாரச் சிந்தனைகள்—அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஆசிரியர்கள்	10	00
திருக்குறளும் பிற உரையாசிரியர்களும் —டாக்டர் மு. கோவிந்தசாமி	12	00
வள்ளுவரும் கம்பரும்—ச. தண்டபாணி தேசிகர்	15	00
திருமந்திரமாலை முந்நூறு—ந. சிவப்பிரகாச தேசிகர்	6	00
மனக்கோயில்—நாக சண்முகம்	6	50
தென் அமெரிக்கப் பயணக்கதை—மணியன்	4	50
ராஜசிம்மன்—கோவி. மணிசேகரன்	6	00
History and Culture of the Tamils (From Pre-Historic Times to the President's Rule) —Raju Kalidas	17	50

அப்பர் அச்சகம், சென்னை-1.